விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 28 திங்கட்கிழமை (10.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 053

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## வயோதிபர் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆலய வழிபாட்டுக்காக சென்ற வயோதிபர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். நல்லூர் பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்.நல்லூர்கந்த சுவாமி கோவில் மேற்கு புறத்திலுள்ள வீதியிலிருந்து யாழ். அரசடி வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் சுந்தரமூர்த்தி (வயது 72) என்பவரின்

19 ஆம் பக்கம் பார்க்க..

## திருமண வைபவத்தில் மாப்பிள்ளை கைது

(யாழ்ப்பாணம்)

திருமணம் நடந்து கொண்டிருந்த போது திடீரென நுழைந்த பொலிஸார் மாப்பிள்ளையை கைது செய்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. யாழ். தட்டாதெரு சந்தியில் நேற்றுக் காலை மண்டம் ஒன்றில் திருமணச்சடங்கு இடம்பெற்றுக் கொண்டிருந்த போதே பொலிஸார் மாப்பிள்ளையை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பெண்கள் சிறுவர் பிரிவைச் சேர்ந்த பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மேற்படி நபர் ஏற்கெனவே கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் பெண்ணொருவரைத் திருமணம் செய்திருந்தார் எனவும் இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் வேறொரு பெண்ணை திருமணம் செய்ய முற்பட்டபோது கைது செய்யப்பட்டதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-6)

## குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்த 'டினோ' குறுப்பைச் சேர்ந்த 9 பேர் கைது

### இராணுவ சீருடை, வாள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சமூகவிரோதச்செயலகளில் ஈடுபட்டுவந்த டினோ குறூப்பைச் சேர்ந்த 9 பேர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயசுந்தரத்தின் வழிநடத்தலில் யாழ்.பிரதிப் பொலிஸமா அதிபர் றொகான் டயஸ் தலைமையிலான பொலிஸ் குழுவினரே மேற்படி குழுவைச் சேர்ந்த 9 பேரைக் கைது செய்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமையும் நேற்று முனதினமும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த டினோ குறூப்பிடமிருந்து 5 வாள், மூன்று கத்தி, 2 இராணுவச் சீருடை, இரண்டு

20 ஆம் பக்கம் பார்க்க..

# போர்க்குற்ற விசாரணையில் மகிந்தவுக்கு அக்கறையில்லை

## சுட்டிக்காட்டுகிறது நியூயோர்க் டைம்ஸ்

The New York Times

(கொழும்பு)

இலங்கையின் இறுதிக்கட்ட போரில் இடம் பெற்ற-வெளியாகியுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தும் அக்கறை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடையாது என இண்டர்நேஷனல் நியூயோர்க் டைம்ஸ் ஊடகம் தெரிவித்துள்ளது. அண்மையில் அவ் ஊடகத்தில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)


நியூவிடம் வீழ்ந்தது இந்தியா
விளையாட்டு பக்கம் 18


மத்திய அரசு பலவீனம் நாடுகள் மதிப்பதில்லை
செய்திகள் பக்கம் 16

மாகாண சபை தீர்வைத் தராது
செய்திகள் பக்கம் 11

சர்வதேச விசாரணையை கனடா வலியுறுத்தும்
செய்திகள் பக்கம் 13


உறவுகளை அச்சுறுத்தி மரணச்சான்றிதழ் வழங்கல்
செய்திகள் பக்கம் 17

எங்களுக்கான தீர்வில் நாங்கள் தெளிவாக இருக்கிறோமா?
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 17

## படுகொலைகளுக்கு காரணமானோரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்!

### நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறற படுகொலைகளுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தலைமையிலான கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் காணாமல் போனோர் தொடர்பான தகவல்களைத் திரட்டி அறிக்கை இடுவதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை எனவும் குறித்த கூட்டணி தெரிவித்துள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி

19 ஆம் பக்கம் பார்க்க..

## 20 ஆவது தடவையாக இன்று மனிதப்புதைகுழி தோண்டப்படுகிறது

### 55 உடற் கூறுகள் இதுவரை மீட்பு

(திருக்கேதீஸ்வரம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி 20-வது தடவையாக தோண்டும் பணி மீண்டும் இன்று 10 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி குறித்த பகுதியில் நீர் இணைப்பிற்கு குழாய் பொருத்துவதற்காக பள்ளம் தோண்டப்பட்ட போது மனித எலும்புக்கூடுகள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் 19 தடவைகள் குறித்த திருக்கேதீஸ்வரம் மனித புதை குழி தோண்டப்பட்டுள்ளது. இது வரை 55 மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும், எச்சங்களாகவும் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றில் 28 மனித எச்சங்கள் மீட்கப்பட்டு பொதி செய்யப்பட்டு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 31ஆம் திகதி திருக்கேதீஸ்வரம் மனிதபுதைகுழியில் மேற்

19 ஆம் பக்கம் பார்க்க..

## குருநகரில் கைக்குண்டு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்றுக்காலை கைக்குண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைககப் பட்டுள்ளது.

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மறைத்து வைக்கப் பட்டுள்ளதாக இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற அவர்கள் மேற்படி கைக்குண்டை மீட்டு தம்மிடம் ஒப்படைத்ததாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

### அமெரிக்க பிரேரணையை வலுப்படுத்த

## தமிழர்களின் எதிர்பார்ப்பை உள்ளடக்கி தயாராகின்றது மாதிரிப் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள கூட்டத் தொடரில் அமெரிக்காவினால கொண்டு வரப்படவுள்ள பிரேரணை எத்தகைய விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டுமென்று தமிழ் மக்களை எதிர்பார்க்கின்றார்கள் என்ற கோணத்தில் மாதிரி பிரேரணையொன்று தயாரிக்கப்பட்டுவருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிளி.அம்மன் ஆலயத்தில் உண்டியல் உடைத்து திருட்டு

கிளிநொச்சி இரணைமடு குளத்திற்கு அருகில் உள்ள கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் உண்டியல் நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு பெரும் தொகை பணம் திருடப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மூன்று பேரிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தெனியாய, விளிகுரூப் சென்.மார்க்ரெட் தோட்டத்திலுள்ள ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் கடந்த வியாழக்கிழமை உடைக்கப்பட்டு அம்மனின் கழுத்திலிருந்த தாலி உட்பட நகைகள் கொள்ளையிடப் பட்டுள்ளன.

குறித்த ஆலயத்திலுள்ள உண்டியல் உடைக்கப்பட்டு பெரும் தொகை பணமும் திருடப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதுடன் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் கடந்த மூன்று மாதத்திற்குள் தெனியாய பிரதேசத்தில் ஆறுக்கும் மேற்பட்ட கோயில்கள் உடைக்கப்பட்டு பணம் மற்றும் நகை திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-6)

# கால்கள் வெட்டப்பட்ட நிலையில் மூன்று பசுக்கள் கடத்தல்

முன்னங்கால்கள் வெட்டப்பட்ட நிலையில் மூன்று பசு மாடுகளை உழவு இயந்திரத்தில் கடத்திக்கொண்டு வந்ததாகக் கூறப்படும் இருவரை யாழ்.கேரதீவு, சங்குப்பிட்டி பாலப் பகுதியில் வைத்து கடந்த சனிகிழமை இரவு கைது செய்ததாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு உழவு இயந்திரத்துடன் பசுக்களையும் கன்டர் ரக வாகனமொன்றையும் மோட்டார் சைக்கிள்ளொன்றையும் கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்னியிலிருந்து சாவகச்சேரிக்கு மேற்படி பசுக்களுடன் வந்த உழவு இயந்திரத்திற்கு உதவியாக கன்டர் ரக வாகனத்தில் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் ஒருவரும் வந்தனர். வீதிப் போக்குவரத்துக் கடமையிலிருந்த பொலிஸார் உழவு இயந்திரத்தை இடைமறித்துச் சோதனையிட்ட போது உழவு இயந்திரம் சாரதியும் கன்டர்ரக வகனச்சாரதியும் மோட்டார்சைக்கிளில் வந்தவரும் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்கள் இருவரையும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தாம் மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-6)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்கிழமை பி.ப 2 மணிக்கு கல்லூரி முதல்வர் சி.பவளகுமாரன்தலைமையில் பாடசாலை மைதானத்தில் சிறப்பாக நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி நிர்வாகவலயக்கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், சிறப்புவிருந்தினராக கைதடி ஹட்டன் நஷனல் வங்கி பொறுப்பதிகாரி ம.கோபிகிருஷ்ணா ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

✦ ✦ ✦ ✦

யாழ்/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர்திறனாய்வுப் போட்டிகள் நாளை மறுதினம்புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி முதல்வரான என்.இராதாகிருஷ்ணன் தலைமையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண தேசியகல்வியியற்கல்லூரியின்ஓய்வுபெற்ற பீடாதிபதியான எஸ்.கே.யோகநாதன், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ரி.சோமசேகரம், கௌரவ விருந்தினர்களாக யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபர் வி.ஓங்கார லிங்கம், யா/அனலைதீவு தெற்கு வித்தியாலய அதிபர் எஸ்.விக்னேஸ்வரி மற்றும் யா/அனலைதீவு வடலூர் கல்லூரி அதிபர் எஸ்.இராஜேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## அபிஷேகம்

யாழ்.இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத சிதம்பர நடராஜப் பெருமான் கோயில் மாசி மாத நடராஜர் அபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை நடைபெறும். (அ-2)


## வேலையாள் தேவை

Photoshop வேலை தெரிந்த வேலையாள் (பெண்) தேவை

பொபி ஸ்ரூடியோ

தொடர்புகளுக்கு:

sureshssulo@gmail.com (C-6471)


# மகிந்த சிறப்பு பாடசாலை கிழக்கு மாகாணத்தில் - பந்துல

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் மஹிந்த ராஜபக்ஷ சிறப்பு பாடசாலை இந்த வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

மஹிந்தோதய வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்ளும் இந்த பாடசாலையை திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இது போன்ற பாடசாலையொன்று ஏற்கெனவே ஹோமாகம பிரதேசத்தில் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

நெனச செயற்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை, உவர்மலை விவேகானந்த கல்லூரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்.

மஹிந்த ராஜபக்ஷ சிறப்பு பாடசாலை தற்போது சகல மாகாணங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றது. இந்த பாடசாலையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் சமகாலத்தில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெறவுள்ளன.

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் அதில் சேர்த்துக்கொள்ளப்படுவர். அத்துடன் திருகோணமலை பிரதேசத்தில் கல்விக் கல்லூரி ஒன்று இல்லை என்ற குறை மிக நீண்டகாலமாக உள்ளது. இந்த ஆண்டில் கல்விக் கல்லூரியொன்றை இங்கு ஆரம்பித்து வைக்கவுள்ளோம் என்றார். (செ)

# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் சுந்தரமூர்த்தி

(ஓய்வுபெற்ற பட்டயக்கணக்காளர், நெல் சந்தைப்படுத்தும் சபை - கொழும்பு)

யாழ்ப்பாணம், தட்டாதெரு, அரசடி வீதி, இல. 50ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரமூர்த்தி அவர்கள் 2014.02.09-ம் திகதி காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் மு.மயில்வாகனம் - சின்னம்மா ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற நாரந்தனையைச் சேர்ந்த அதிபர் மு.நா.கந்தையா- சோமவதி ஆகியோரின் பாசமிகு மருமகனும் சாலினியின் பாசமிகு கணவரும் மயில்வாகனம் சிவானந்தநாயகியின் பெறாமகனும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, பார்வதி (USA), கனகசபாபதி (நோர்வே) காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவன் இளங்கோ (லண்டன்), கௌரி, திருமகள், அமரர் சூலபாணி, மன்றுளாடி, மாலினி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கங்கவேணியன், அமரர் பரமேஸ்வரன், கைமா, கௌரி, யோகலட்சுமி, அமரர் சச்சிதானந்தன், தேவிகா, ராஜினி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு சகலனும் துளசி (நோர்வே), ஜனனி (நோர்வே), சாயிசுரபி (கனடா), விசாகி ஆகியோரின் பெரிய தந்தையும் சாரங்கன் (லண்டன்), சயந்தினி (லண்டன்), அபிரிகா, மயூரிகா, அபிஷகன், லக்ஷிகன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10.02.2014-ம் திகதி காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50, அரசடி வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

தகவல் :
மனைவி
(021 3006290)

(5558)


## வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம் - 2014

இடம் :- வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை சிகிச்சை மண்டபம்

காலம் :- 23.02.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி

நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்
தலைவர் உரை
செயலாளர் அறிக்கை வாசித்தல்
பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
புதிய நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்தல்
பிற விடயங்கள்
நன்றி உரை



அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மாவட்ட வைத்திய அதிகாரி திரு.து.சக்திவேல்
பிரதேச வைத்தியசாலை செயலாளர்,
வல்வெட்டித்துறை நோயாளர் நலன்புரிச் சங்கம்.

(சி-6468)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. சிலுவைமுத்து ஜோன் செல்வரட்ணம்

(SLPS III)

கிளி/முருகானந்தா கல்லூரியில் பிரதி அதிபராக கடமையாற்றி தற்பொழுது கிளி/கோணாவில் GTMS இற்கு அதிபராக நியமனம் பெற்றுச் செல்லும் எமது பிரதியதிபர் திரு.சி.ஜோன் செல்வரட்ணம் அவர்களை மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
கிளி/முருகானந்தா கல்லூரி,
கிளிநொச்சி.

(5557)

## வீடு விற்பனைக்கு

இல. 22/01, 3-ம் ஒழுங்கை (பொன்னம்பலம் வீதி) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒரு பரப்பு காணி வீடு, கிணறு வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (இ)

0775487486, 0212052741

பண்டாரநாயக்க நினைவு மாநாட்டு மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து DIT , HDIT , BIT பட்டம்பெறுகின்ற எமது மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

MCS IT CAMPUS யாழ் பல்கலைக்கழகம் அருகாமை 077 2 395 895



செந்தூரன் சாய்ராஜ் சோபனா சிந்துலேக்கா ராதை
சாமினி ... தெய்வமைந்தன்

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
க.பொ.த சாதாரண தர தகைமையுடன் விண்ணப்பிக்கலாம்.
ஒவ்வொருபாடத்திற்கும் துறைசார்ந்த தனித்தனி விரிவுரையாளர்கள்.

புதிய பிரிவுகள் Feb 14 , 9.00 am ஆரம்பம்

BIT

for applications: Type <BIT><NAME> send to 077 2 395 895

இவர்களையும் வாழ்த்துகின்றோம்

சிரோமி, சிதம்பரநாதன், ஜனனி, ஜனகன், தயாளினி, யசோதா, மயூரி, சசிகரன், சிந்துஜா, பிரியங்கா, ஜெகதா சுபாகரன், சங்கீதா, சுபாஜினி

Feb 14 இற்கு முன் இணைபவர்களிற்கு விசேட புலமைப்பரிசில்

(C-6467)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சரஸ்வதி மகால்

தஞ்சாவூரை சரபோஜி மன்னர் ஆட்சி செய்து கொண்டிருந்த காலம்.

அப்போது ஒரு தடவை அந்த மன்னர் காசி யாத்திரை சென்றார்.

அந்த சமயத்திலே கல்கத்தாவிலே இருந்த ஆங்கிலேயர் ராஜப் பிரதிநிதியையும் சந்திப்பதற்காக சென்றிருந்தார்.

அந்த ராஜ பிரதிநிதி தமிழ்நாட்டில் இருந்து ஒரு ராஜா தம்மைப் பார்ப்பதற்காக வருகிறார் என்றதும் தமிழ் நாட்டின் அருமை பெருமையெல்லாம் அறிந்து வைத்துக் கொண்டார்.

அவர் ஏற்கனவே திருக்குறளோடு ஆங்கில மொழி பெயர்ப்பை படித்தவர், அதோடு பெருமையை நன்றாக புரிந்து கொண்டார். அதனாலே அதோடு தமிழ் மூலமான நூலைப் பற்றி தமிழ் நாட்டி லேயிருந்து வருகின்ற ராஜாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டார்.

சரபோஜி ராஜா வந்து சேர்ந்தார். ஆங்கிலேய ராஜப்பிரதிநிதி அவரை அன்போடு வரவேற்றார்!

இரண்டு பேரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது இந்த இங்கிலீஸ்காரர் தஞ்சாவூர் ராஜாவைப் பார்த்துக் கேட்டார்.

தமிழ் நாட்டிலே உண்டான திருக்குறளோடு ஆங்கில மொழிப் பெயர்வை நான் படித்து அனுபவித்திருக்கிறேன். மொழி பெயர்ப்பே அப்படி இருந்தால் மூலநூல் எந்த அளவுக்கு இருக்கும் என்பதை நான் யோசித்துப் பார்க்கின்றேன். அதை யாராவது சொல்லிக் கேட்க வேண்டுமென எனக்கு ஆசையாக இருக்கிறது! அதனாலே திருக்குறளில் சிலதை எனக்கு நீங்கள் சொல்லுங்களேன்! என்று கேட்டுக் கொண்டார்.

சரபோஜி மன்னருடைய தாய்மொழி–மராட்டி (மகாராஷ்டிரம்)

அதனால் தமிழிலே திருக்குறளை எடுத்துச் சொல்கின்ற நிலை மையில் அவர் இல்லை!

ராஜப்பிரதிநிதி இப்படிக் கேட்டு விட்டாரே என்ன செய்வது என்று முதலில் கொஞ்சம் யோசித்தார் ராஜா! இருந்தாலும் அறிவுக் கூர்மை உள்ளவர் சரபோஜி மன்னர்.

அதனால் அவர் அந்த ராஜப்பிரதிநிதியைப் பார்த்து "என்னு டைய புத்தகசாலையிலே அதேமாதிரி ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் உண்டு. அதனால் எல்லாவற்றையும் நான் தெரிந்து வைத்துக் கொள்வது முடியாத காரியம். நீங்கள் அனுமதி கொடுத் தால் நான் ஊருக்குப் போனதும் அந்தப் புத்தகத்தை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்!" என்றார்.

"இது மாதிரி இன்னும் எவ்வளவு தமிழ்ப் புத்தகம் இருக்கிறது?" என்று கேட்டார் அவர்.

"எவ்வளவோ இருக்கிறது! ஊருக்குப் போனதும் அதனுடைய பட்டியலையும் அனுப்பி வைக்கின்றேன்! என்றார்" இவர்.

"சரி! அப்படியே செய்யுங்கள்!" என்று சொல்லி விட்டார் அவர்.

ராஜா திரும்பி வந்தார்; யோசித்துப் பார்த்தார்.

தமிழ்நாட்டுக்கு ராஜாவாக இருந்து கொண்டு தமிழ்மொழியிலே கவனம் செலுத்தாமல் இருந்தது எவ்வளவு பெரிய தவறு என்று அவருக்குப் புரிந்து விட்டது.

இனிமேல் அப்படி இருக்கக் கூடாது என்று முடிவு செய்தார். தமிழ்ச் சுவடிகளையெல்லாம் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். தமிழ்ப் புலவர்களையெல்லாம் ஆதரிக்க வேண்டும் என்று தீர்மா னித்தார்.

அதனுடைய விளைவு தான் இன்றைக்கு இருக்கின்ற தஞ்சா வூர் சரஸ்வதி மகால் நிலையம்.

ராஜா சொன்னது போலவே திருக்குறள் பிரதியையும் தமிழ்நூல் பட்டியலையும் கொல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தார்.

சரபோஜி மன்னர் புத்தகங்களை தேடிக்கண்டு பிடித்துக் கடை யிலே பாதுகாப்பதிலே அக்கறையாக இருந்தார்.

"நாமெல்லாம் புத்தகங்களை தேடிக்கண்டு பிடித்துக் கடையிலே போடுவதிலே அக்கறையா இருக்கிறோம்!" என்றேன் என் நண்பர் ஒருவரிடம்!

இதுக்கு அவர் பெர்னாட்ஷாவுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை சொன்னார்.

ஒரு தடவை பெர்னாட்ஷா ஒரு பழைய புத்தக் கடைக்குப் போய் சிலவற்றை எடுத்துப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாராம்.

அவரே எழுதிய நாடக நூல் ஒன்று இருந்தது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அது ஒரு நண்பருக்கு பெர்னாட்ஷா ஏற்கனவே அன்பளிப்பாக கொடுத்த புத்தகம்.

அந்த நபர் கடையிலே போட்டுவிட்டார் போல இருக்கிறது.

பெர்னாட்ஷா மறுபடியும் அதை விலை கொடுத்து வாங்கினார். அதிலே ஏற்கனவே அன்பளிப்பு எழுதியிருந்ததற்கு கீழே 'புதுப்பித்த அன்பளிப்பு' என்று எழுதி கையெழுத்து போட்டார். மறுபடியும் அதே நண்பருக்கு அனுப்பி வைத்துவிட்டார். அதாவது அன்பளிப்பை Renew பண்ணிவிட்டார். 'லைசென்ஸ்' எல்லாம் Renew பண்ணு வார்களே அதுமாதிரி!

இந்தச் சம்பவத்தை என்னிடம் சொன்ன நண்பர்களிடம் நான் ஒரு கேள்வி கேட்டேன். "ஏன் சேர்! நான் எழுதிய புத்தகம் ஒன்றை 'அன்பளிப்பு' என்று எழுதி உங்களிடம் கொடுத்தால் நீங்கள் அந்த நபர் செய்தது மாதிரியாகச் செய்வீர்களா?" என்றேன்.

"நிச்சயமாக அப்படிச் செய்ய மாட்டேன்! வேறு மாதிரி பண்ணு வேன்" என்றார்.

"என்ன பண்ணுவீர்கள்?" என்றேன்.

"நீங்கள் எழுதிக் கையெழுத்துப் போட்ட பக்கத்தை கிழித்துவிட்டு அதற்குப் பின்னர் கடையிலே போடுவேன்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான இந்துசமய பொதுஅறிவு போட்டிப்பரீட்சை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக ஜூன் மாதம் இந்து சமய பொது அறிவுப் போட்டிபரீட்சையை ஒவ்வொரு வருடமும் நடத்தி வருவ தாக இத்திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இரண்டாம் வகு ப்புக்குரிய சைவபோதினி பாலர் பிரிவில் பக்கம் ஒன்றிலிருந்து பக் கம் 38 வரை ஒரு மணித்தியாலமும் மூன்றாம்வகுப்பிற்குரியசைவபோதினி பாலர் பிரிவில் பக்கம் 36 தொடக்கம் பக்கம் 62 வரை ஒரு மணித்தியால மும் நான்காம் வகுப்பிற்குரிய சைவ போதினியில் பக்கம் ஒன்றிலிருந்து பக்கம் 55 வரை ஒரு மணித்தியா லமும் ஐந்தாம் வகுப்பிற்குரியது பக்கம் 60 தொடக்கம் பக்கம் 134 வரையும் ஒரு மணித்தியாலமும் ஆறாம் வகுப்பிற்குரியது பக்கம் ஒன்றிலிருந்து பக்கம் 89 வரையும் ஒரு மணித்தியாலமும் ஏழாம்வகுப்பிற் குரியது பக்கம்95 தொடக்கம் பக்கம் 174 வரையும் ஒரு மணித்தியாலமும் எட்டாம் வகுப்பிற்குரியது பக்கம் 175 தொடக்கம் பக்கம் 211 வரையும் ஒரு மணித்தியாலமும் சைவசமயம் ஒன் பதாம் வகுப்பிற்குரியது பக்கம் ஒன் றிலிருந்து பக்கம் 110 வரையில் ஒரு மணித்தியாலமும் நடத்தப்படும்.

அத்துடன்பத்தாம்வகுப்பிற்கு சைவ சமயம் முழுவதும் 1.30 மணித்தியா லமும் பதினொராம் வகுப்பிற்கு சைவ சமயம் முழுவதும் 1.30 மணித்தியால மும் நடத்தப்படும்.

இப்பரீட்சையின் போட்டி விதி முறைகளாக,

இரண்டாம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் (2014 ஆம் ஆண் டில் பாடசாலையில் கற்கும் வகுப்பு) அனைத்துமாணவர்களும்பரீட்சைக்கு தோற்றவேண்டும், மேற்குறிப்பிட்ட வகுப்புக்களுக்கு அமையவே மாண வர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித் தல் வேண்டும், விடயப்பரப்பின் அடிப்படையிலேயே பத்து வகுப்புக் களுக்கும் வினாத் தாள்கள் அமையும், அந்தந்த மாவட் டங்களில்பரீட்சை நடைபெறு வதுடன் 40 புள் ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்க ளுக்கு சான்றிதழ் வழங்கப் படும், தங்களுக்குஅண்மை யில் உள்ள பாடசாலையை பரீட்சைநிலையமாகத்தெரிவு செய்து பரீட்சை விண்ணப்ப த்தில்அதன் பெயரை குறிப் பிட்டு அனுப்ப வேண்டும், தாங்கள் குறிப்பிட்டு அனுப் பப்படும் பரீட்சை நிலையத்தி ற்கு நான்கு அறநெறிப் பாடசாலைகளுக்கு மேல் விண்ணப்பித்திருந்தால் மாத் திரமே பரீட்சைநிலையமாகத் தெரிவு செய்யப்படும், ஒவ் வொரு வகுப்புக்கும் தனித் தனி விண்ணப்பப்படிவத் தில் பூரணமாக நிரப்பப்படு தல் வேண்டும். (தேவை யான அளவு விண்ணப்பப் படிவத்தை பிரதி செய்து கொள்க), அனைத்து விண் ணப்பப்படிவங்களையும் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்கிடைக்கு மாறு The Director, Department of Hindu Religious and Cultural Affairs, 248-1/1, Galle Road, Colombo-04 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க ப்படல் வேண்டும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இந்து சமயப்பொது அறிவுப் போட்டி 2014 எனக்குறிப் பிடப்படல் வேண்டும் என அவர் குறி ப்பிட்டுள்ளார். (அ-2)

# பொலிஸாரை தாக்கிய மேஜர் பிரசன்ன கைது

பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய சம்பவம தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தென்மாகாண சபை வேட்பாளர் மேஜர் அஜித் பிரசன்ன கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி நகரில் கடந்த 6ஆம் திகதி அவர் தனது ஆதரவாளர்களு டன் ஊர்வலம் சென்ற போது பொலிஸாருக்கும் அவருககும் இடையில் மோதல் ஏற்பட்டது. அஜித் பிரசன்ன, இந்த சம்பவத்தின் போது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மீது தாக்குதல் நடத்தும் புகைப்படங்களும், காணொளிகளும் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, இராணுவ சீருடையில் ஊர்வலம் சென்றமை ஆகிய குற்றச் சாட்டுக்களின் கீழ் அஜித் பிரசன்ன கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

சுகவீனம் காரணமாக அஜித் பிரசன்ன கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதி க்கப்பட்டிருந்த நிலையில், காலி பொலிஸ் நிலையத்தின் விசேட குழுவொன்று அவரை நேற்று பிற்பகல் கைதுசெய்தது. (செ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 80 |
| தக்காளி | 25 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 60 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 80 | 60 |
| பாகற்காய் | 80-120 | 100 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 40 |
| பயற்றங்காய் | 200 | 150 | 120 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 60 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 400 |
| போஞ்சி | 40 | 80 | 50 |
| கத்தரிதம்புள்ள | 70 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 20 |
| தேசிக்காய் | 50 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 70 | 90 | 100 |

# இராசி பலன்

*10.02.2014*
*(தை 28, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு*
*ஏகாதசி முன்னிரவு 10.18 மணிவரை*
*மிருகசீரிடம் பிற்பகல் 4.06 மணிவரை*
*இராகுகாலம் 8.04-9.34 மணிவரை*
*சுபநேரம் 12.34-2.04 மணிவரை*
*பீம ஏகாதசி விரதம்*
*அமிர்த சித்தம்*

**மேடம்** உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெற லாம், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப செலவுகள் அதிகரிக்கும், வார்த்தை களால் பிறரை கவர்வீர்கள், தெய் வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தா லும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், வியாபார நலன் கருதி புது முயற்சி எடுப்பீர்கள், புதிய பொருட் கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய் திகளால் உற்சாகம் அடைவீர்கள், மாற் றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், சிலர் மீது காரண மில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**சிங்கம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், பொருளாதார நிலையில் முன் னே ற்றம் ஏற்படலாம், போசன நன்மையுண்டு.

**கன்னி** சுப தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண் பர்களும் வலிய வந்து உதவ முன் வரலாம், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** தந்தை வழி உறவில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், வெளியூர்ப் பயணங்களால் ஆதாய முண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிட லாம், போசன சுகமுண்டு, திருடர் பய முண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** பாலிய நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரி க்கும், பொருளாதார நிலையில் முன் னேற்றமுண்டு, காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட் டுவீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், போசன நன்மை யுண்டு, காரிய நன்மையுண்டு.

**கும்பம்** புதிய பொருட்சேர்க்கையுண்டு, பிள்ளைக ளின் சுய தேவைகளை பூர்த்தி செய்யும் எண் ணம் உருவாகும், சொத்துக்களால் ஆதாய முண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்ட வேண்டி வரலாம்.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளா தார நிலை உயரும், தொலை பேசித் தகவல் மகிழ்ச்சி தரும், அதிகாரிகளின் ஒத்தாசைகள் கிடைக்கும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் கிளை திறக்கும் பிரதேச அபிவிருத்தி வங்கி

முல்லைத்தீவில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் கிளையொன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள எடுக்கப்பட்டுள்ள தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

பிரதேச அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சி கிளையில் 500 இற்கும மேற்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குற்பட்ட முள்ளியவளை, முல்லைத்தீவு, குமுழமுனை, கொக்குத்தொடுவாய், கருனாட்டுக்கேணி , கொக்கிளாய், ஆகிய பகுதிகளை சேர்ந்த பயனாளிகள்உள்ளனர்.

இவர்களின் வங்கி நடவடிக்கைகளும் இலகுபடுத்தப்படும் என்பதால் முல்லைத்தீவு நகரில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் கிளையொன்றை அமைப்பற்கு வங்கி தீர்மானித்துள்ளது.

எனவே' முதலில் புதுக்குடியிருப்பில் பிரதேச அபிவிருத்தி வங்கி கிளையொன்றை திறந்து வைத்து வங்கி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதுடன் மிக விரையில் முல்லைத்தீவு நகரிலும் கிளையொன்றையும் திறக்கவுள்ளதாகவும்,

முல்லைத்தீவு நகரில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் கிளையொன்றை அமைப்பதற்கு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தின் காணி பிரிவு காணியினை வழங்கியுள்ளது எனவும் வங்கி முகாமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.




# தமது வி/னை குழுவை கௌரவித்தது Pureit

யுனிலீவர் சிறிலங்கா நிறுவனத்தின் உள்ளக நீர் தூய்மையாக்கி வர்த்தக நாமமான Pureit ஆனது புது வருடத்தினை கோலாகலமான நிகழ்வுடன் ஆரம்பித்து வைத்தது. 200இற்கும் மேற்பட்ட விற்பனை குழுவினர் பங்குபற்றிய இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிரிக்கெட் ஜாம்பவான் அர்ஜான ரணதுங்க முக்கிய உரையாற்றியிருந்தார்.

கிரிக்கெட் எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற மாபெரும் நிகழ்வினை Pureit வர்த்தக நாமத்தின் வியாபாரப் பிரிவின் தலைவர் ஷானக வது ராகல அவர்கள் 2014-ம் ஆண்டின் திட்டங்கள் குறித்த தகவல்களுடன் ஆரம்பித்து வைத்தார்.

"ஒவ்வொரு ஆண்டும் நாம் எமது விற்பனை குழுவினரின் கடின உழைப்பு மற்றும் சாதனைகளை அடையாளப்படுத்து கிறோம். இந்த வருடம் நடைபெறும் மாநாட்டில் சந்தையிலுள்ள எமது எதிர் கால திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழிமுறைகளை தெளிவுபடுத்தியமை விசேட நிகழ்வாக அமைந்திருந்தது. எமது நீர் வணிகத்தின் முதுகெலும்பாக உள்ள விற்பனை குழுவினர் அதியுயர் திறமையை வெளிப்படுத்துவதற் கான வழி காட்டல்களை வழங்கு வதற்கான செயற்பாடுகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம் என பியூரிட் வர்த்தக நாம முகாமையாளர் ரொவினி தெரிவித்தார்.

# LMD தரப்படுத்தலில் முதலிடத்தில் SLIIT

புகழ்பெற்ற வணிக இதழான LMD மூலம் இந்நாட்டு உயர்கல்வி நிலையங்கள் தரப்படுத்தலில் இலங்கையின் உயர்கல்வி நிலையங்களுள முதலிடத்தை இலங்கை தகவல் தொழில்நுட்பக் கல்வியகம் (SLIIT) தெரிவு செய்யப்பட்டுள்ளது.


உள்நாடு மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு பட்டதாரி கற்கைநெறிகள், புகழ்பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனான தொடர்பு, உலகளவில் நன்கறியப்பட்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் தகைமைகள் மற்றும் அங்கீகாரம், பரந்துபட்ட கற்கைகள், புலமைப பரிசில், விளையாட்டுக்கள் மற்றும் இதர செயற்பாடுகள் ஆகியவற்றின் சிறப்புத்தன்மை காரணமாக SLIIT முதலிடத்தை பெற்றது.

40 கல்வியகங்களை பின்தள்ளிவிட்டு SLIIT முதலிடத்தை பெற்றுக்கொண்டது. சிலோன் ஜேர்மன் டெக்னிக்கல் பயிற்சி கல்வியகம் 2-வது இடத்தையும், NIBM, British College of Applied Studies மற்றும் Aquinas College of Higher Studies ஆகியன முறையே 3, 4 மற்றும் 5 -வது இடத்தினை பெற்றுக்கொண்டன.

இத் தரப்படுத்தல் குறித்து SLIIT இன் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பேராசிரியருமான லலித் கமகே கருத்து தெரிவிக்கையில்,

முதலிடத்தில் தெரிவானதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைவதுடன் இது மலேசியாவைப் போன்று இலங்கையை கல்வி மையமாக உருவாக்கும் எமது நோக்கத்திற்கு வலுசேர்ப்பதகாக அமைந்துள்ளது என்றும் கற்கைநெறிகளை சர்வதேசமயமாக்குதல் ஆகியவற்றினூடாக பிராந்தியத்திலுள்ள சிறந்த 10 பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக எம்மை நிலைப்படுத்துவதே எமது எதிர் காலத் திட்டமாகும் என்றார்.

20 வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனான SLIIT இன் இணைவு மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற IT, பொறியியல் மற்றும் வணிக முகாமைதத்துவத்தில் இளநிலை மற்றும் முதுகலை கற்கைகள் வழங்கப்படுகின்றன.



SLIIT கல்வியகமானது விசேட தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பம் Computer Systems மற்றும் நெட்வொர்கிங், மென்பொருள் பொறியியல், ஊடகம் மற்றும் Information Systems துறைகளில் நான்கு வருட கௌரவ B.Sc பட்டதாரி கற்கைகளை மாணவர்களுக்கு வழங்குகிறது.

மேலும் விசேட சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துடன் வணிக முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி, மனிதவள முகாமைத்துவம், தர முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள் துறைகளில் நான்கு வருட BBA விசேட கௌரவ பட்டதாரி கற்கைகளும் வழங்கப்படுகின்றன.

பொறியியல் துறையில் சாதிக்க விரும்பும் மாணவர்கள் சிவில், மெக்கானிக்கல், Material, மின் மற்றும் மின்னணு பொறியியல் மற்றும் எந்திரவியல் ஆகிய துறைகளில் 4 வருட B.Sc பொறியியல்(கௌரவ) பட்டதாரி கற்கைகளை தொடர முடியும். மேலும் SLIIT ஆனது மைக்ரோசொஃப்ட் IBM மற்றும் CISCO சிஸ்டம்ஸ் உடன் இணைந்து சான்றளிக்கப்பட்ட தொழில்சார் நிபு ணத்துவ அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

SLIIT கல்வியகத்தின் மூலம் மாணவர்களுக்கு பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள உதவியாக தொழில் வழிகாட்டல்கள் வழங்கப்படு கின்றன. அதியுயர் நம்பகத்தன்மை மற்றும் நற்பெயரை கொண்ட SLIIT நிலையத்தின் அனைத்து மாணவர்களும் பட்டதாரியாகி ஒரு வருடத்தினுள் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆர்வமுள்ள மாணவர்கள் 0112413900 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு மேலதிக விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

வட்டவளை பெருந்தோட்ட நிறுவனம் 2013 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த 9 மாத காலப்பகுதிக்குள் 4.5 பில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அந்த நிறுவனதன் 2014ம் ஆண்டிற்கான நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது நூற்றுக்கு 8.8% அதிகரிப்பு என்பதுடன் நிறுவனத்தின் தேறிய வருமானம் கடந்த வருடத்தில் 589 மில்லியனில் இருந்து 311 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

# 30-வது வருட பூர்த்தியை கொண்டாடும் ஹார்பிக்




ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் முதன்மை கழிவறை தூய்மையாக்கி வர்த்தக நாமமான ஹார்பிக், இலங்கையில் தனது 30 ஆவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடுகிறது.

உலகளாவிய ரீதியில் 100 ஆண்டுகால வரலாற்றை ஹார்பிக் கொண்டுள்ளது. 1920ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த ஹரி பிக்கப் என்பவரினால் வடிவமைக்கப்பட்ட ஹார்பிக் தற்போது ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் மூலம் உலகம் முழு வதும் ஏறத்தாழ 76 நாடுகளில் இத் தயாரிப்பு விற்பனை செய்யப்படுகிறது.

இலங்கையில் 1984ஆம் ஆண்டு தமது செயற்பாடுகளை ஆரம்பித்த ஹார்பிக் அன்று முதல் சந்தையில் கழிவறை தூய்மையாக்கியாக தன்னை நிலைப்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது.

கடந்த 3 தசாப்தங்களில் சந்தையின் பெரும்பங்கினை ஹார்பிக்கினால் கைப்பற்ற முடிந்துள்ளதுடன், இலங்கை வாடிக்கையாளர்கள் கழிவறை சுத்தமாக்கிகளை கொள்வனவு செய்யும்போது ஹார்பிக் பெயரை குறிப்பிட்டு வாங்கும் நிலை இன்று உருவாகியுள்ளது.

# கடந்த வாரம் பங்குச்சந்தை

கடந்த மாதம் பொதுவாக உயர்ந்த பெறுமதிகளை தொடர்ந்து பதிவு செய்துவந்த, கொழும்பு பங்குச்சந்தை கடந்த வாரம் சரிவான பெறுமதி களை பதிவு செய்தது. வெளிநாட்டவர்கள் தமது பங்குகளை அதிகளவு விற்பதில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் நிறைவடைந்தபோது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,141.72 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 3369 ஆகவும்பதிவாகியிருந்தன.

பெப்ரவரி 03-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 7,302,848,169 அமைந்திருந்தது. கடந்த வாரம் 26,013 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

கடந்த திங்கட்கிழமை சந்தை நடவடிக்கைகளை நோக்கின்,

ஜோன் கீல்ஸ் பங்குகள் மீது விலைச்சரிவுகள் பதிவாகியிருந்த நிலையில் சந்தை சிவப்பு நிற பெறுமதியில் நிறைவடைந்திருந்தது. மொத்தப்புரள்வு பெறுமதியை 34வீதத்தால் அதிகரித்து 1 பில்லியன் ரூபாவை விட அதிகரிக்கச் செய்திருந்தது. ஹற்றன் நஷனல் வங்கி பங்குகள் மீது உயர்ந்தளவு ஆர்வம் காணப்பட்டதுடன், எக்ஸ்போலங்கா மற்றும் எஸ்எம்பி லீசிங் ஆகிய பங்குகள் மீதும் ஈடுபாடு காணப்பட்டது. கொமர்ஷல் வங்கி மற்றும் செலான் வங்கி வாக்குரிமையற்ற பங்குகள் மீது வெளிநாட்டவர்களின் கவனம் அதிகளவு காணப்பட்டது. வெளிநாட்டவர்கள் நிகர கொள்வனவாளர்களாக காணப்பட்டனர். மேலும், ஜோன் கீல்ஸ் ஹோல் டிங்ஸ், எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் மற்றும் DFCC வங்கி ஆகிய பங்குகள் மீது மொத்த வியாபாரம் பதிவாகியிருந்தது.

செவ்வாய்க்கிழமை சுதந்திர தினத்தை முன்னிட்டு சந்தை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

புதன்கிழமை சந்தையின் மொத்த வியாபாரங்களின் பங்களிப்பின் மூலம் மொத்தப்புரள்வு பெறுமதி ஒரு பில்லியன் ரூபா எனும் தொகையை கடந்துள்ள நிலையில், செயற்பாடுகள் நாள் முழுவதும் மந்த கதியில் காணபட்டன. ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், கொமர்ஷல் வங்கி ஆகிய பங்குகள் மீது உயர் நிகர பெறுமதி வாய்ந்த செயற்பாடுகள் பதிவாகியிருந்தன.

கொமர்ஷல் வங்கி மற்றும் ஜோனகீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகளின் வலைச் சரிவுகள், பிரதான சுட்டிகளை வீழ்ச்சியடையச் செய்திருந்தன. இதேவேளை சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஆர்வம் எஸ்எம்பிலீசிங வாக்குரிமை மற்றும் வாக்குரிமையற்ற பங்குகள் மீது காணப்பட்டது.

அடுத்த நாள் வியாழக்கிழமை சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள் பரந்தளவில் சரிவை பதிவு செய்திருந்த போதிலும் மொத்தப்புரள்வு பெறுமதி 3 பில்லியன் ரூபா பெறுமதியை எய்தியிருந்தது. ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் கொள்வனவு மொத்தப்புரள்வு பெறு மதியை 61 வீதத்தால் அதிகரிக்கச் செய்திருந்தது.

கொமர்ஷல் வங்கி, சிறிலங்கா ரெலிகொம் மற்றும் ஹற்றன் நஷனல வங்கி பங்குகள் மீது நிறுவனசார் ஈடுபாடு காணப்பட்டது. டெக்ஸ்ச்சர்ட் ஜேர்சி மற்றும் சொஃப்ட்லொஜிக் பினான்ஸ் ஆகிய பங்குகள் மீது சிறியளவிலான முதலீட்டாளர்கள் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்த னர். மேலும் வெளிநாட்டவர்கள் பெரும ளவு பங்கு விற்பனையில் ஈடுபட்டிருந்தனர்.

வாரத்தின் இறுதி சந்தை நாளான வெள்ளிக்கிழமை கொடுக்கல் வாங்கல்கள் பரந்தளவில் சரிவை பதிவு செய்திருந்தது. இதில் சிலோன் டொபாக்கோ கம்பனி மற்றும் நெஸ்லே லங்கா ஆகியன அதிகளவு பங்களிப்பை வழங்கியிருந்தன. வெளிநாட்ட வர்கள் டயலொக் ஆக்சியாடா, கொமர்ஷல் வங்கி வாக்குரிமையற்ற பங்குகள் மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் ஆகியவற்றை அதிகளவு விற்பனை செய்திருந்தனர். இதன் காரணமாக மொத்தப்புரள்வு பெறுமதியும் 1 பில்லியன் ரூபா பெறுமதியை எய்தியிருந்தது. சிறியளவிலான முதலீட்டா ளர்களின் செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெற்றிருந்தது.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் சிங்கபுத்ர பினான்ஸ், மொரிசன்ஸ், பிம்புத் பினான்ஸ், அபான்ஸ் பினான்சியல் மற்றும் இந்தோ மலே போன்றன முதல் 5 சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

மிரமர், ஸெரண்டிப்லாண்ட், சிலோன் லெதர் (உரிமை), ஜி.எஸ்.பினான்ஸ் மற்றும் செமானெக்ஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நட்டமீட்டியதாக பதிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.25 | 132.13 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 210.28 | 216.30 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.69 | 180.41 |
| சுவிஸ் பிராங் | 142.53 | 147.76 |
| கனேடிய டொலர் | 116.07 | 120.00 |
| அவுஸ்திரேலிய டொலர் | 114.63 | 118.97 |
| சிங்கப்பூர் டொலர் | 101.39 | 104.71 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.09 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.56 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி அபிவிருத்தி சங்கங்களில் புதிய நிர்வாகிகள் தெரிவு ஆரம்பம்

கிளி.மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் புதிய நிர்வாகத் தெரிவுகள் நடாத்தப்பட்டு வருவதாக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்படி இன்று திங்கட்கிழமை அம்பாள் நகர் கிராம் அலுவலர் பிரிவைச் சேர்ந்த சாந்தபுர மாதர் அபிவிருத்திச் சங்கத் தெரிவு காலை 10 மணிக்கும் சிவநகர் கிராம அபிவிருத்தி சங்க தெரிவு காலை 9.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை சிவநகர் மாதர் அபிவிருத்திச் சங்கத் தெரிவு முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறுவதுடன் 13ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30க்கு தொண்டமாநகர் கிராம அபிவிருத்திச் சங்க தெரிவும் இடம்பெறவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மலையாளபுரம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தெரிவும் முற்பகல் 11.30 மலையாளபுரம் தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத் தெரிவும் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இராமநாதபுரம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தெரிவும் முற்பகல் 11.30 மணிக்கு இராமநாதபுரம் தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கிருஷ்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தெரிவும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உருத்திரபுரீஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தெரிவும் முற்பகல் 11.30 மணிக்கு உருத்திரபுரீஸ்வரம் மாதர் அபிவிருத்திச் சங்கத் தெரிவும் பிற்பகல் 2 மணிக்கு குஞ்சுப்பரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கத் தெரிவும் இடம்பெறவுள்ளது. இத்தெரிவுகளை நடத்துவதற்கு அந்தந்த பகுதி கிராம அலுவலர்கள் கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர்.

இதன்போது கடந்த கால கணக்கறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட உதவிகள் மற்றும் பொருட்களின் விபரங்கள் தெரியப்படுத்தப்படவேண்டுமென பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-9-254)

# விவசாயிகளுக்கு புதிய ஓய்வூதியத்திட்டம் அறிமுகம்

விவசாயிகளுக்கு புதிய விவசாய ஓய்வூதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அதன் பணிப் பாளர் நாயகம் பண்டுக்க வீரசிங்க கூறியுள்ளார்.

வவசாய ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்துள்ள விவசாயிகளின் வயதின் அதிகரிப்பிற்கு அமைய கொடுப்பனவு அதிகரிக்கும் வகையில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விவசாய ஓய்வூதிய திட்டத்திற்கு பயனாளிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு கமநல காப்புறுதி சபை உத்தேசித்துள்ளது. (2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 24 ½ உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L / முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/1051 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 48 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பயிற்றப்பட்ட ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: மணமகள் சைவபோசனம்<br>தொ.இ: G/1506 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 17 சூரி செவ் 12 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, MA (Following) / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B/1054 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 35 ¾ செவ் 12 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA / அரச வங்கியாளர்<br>தொ.இ: G/1507 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 42 ½<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BCA / ஆசிரியர்<br>தொ.இ: B/1057 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 49 ¾<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/1509 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 14 செவ் 1 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / தொழிற்சாலை (கனடா PR)<br>தொ.இ: B/1060 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 20 செவ் 12 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc / கணக்காளர் (UK – PR)<br>தொ.இ: G/1511 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# காங்கிரஸ் கட்சிக்கு எதிராக நிர்வாணமாக மக்கள் போராட்டம்



(சென்னை)

அனைத்து மாநிலங்களிலும் சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்ற மாநிலங்களவை (ராஜ்ய சபா) தேர்தலையொட்டி அசாம் மாநில எம்.எல்.ஏ.க்களும் வாக்களித்தனர்.

வாக்கு எண்ணிக்கைக்கு பின்னர், ஆளும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 3 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டதாகவும், எதிர்க்கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தோல்வி அடைந்ததாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டவர்களில் உத்தர பிரதேசம் மாநிலத்தில் உள்ள அமேதி தொகுதியின் முன்னாள் மக்களவை எம்.பி. சஞ்சய் சிங் என்பவரும் ஒருவராவார்.

இந்நிலையில், முன்னறிவிப்பு ஏதுமின்றி அசாம் சட்டசபை வாசலருகே நேற்று முன்தினம் கூடிய 6 பேர் யாரும் எதிர்பாராத வேளையில் தங்களது ஆடைகளை கழற்றி வீசி விட்டு நிர்வாண போராட்டத்தில் குதித்தனர்.

பணத்தாசை காட்டி எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கிவிட்ட காங்கிரஸ் கட்சி, சஞ்சய் சிங் வெற்றி பெற்றதாக அறிவித்துள்ளது. உத்தர பிரதேச மாநிலத்தை சேர்ந்த அவரை அசாம் மாநில ராஜ்யசபா எம்.பி.யாக தேர்வு செய்தது மிகப்பெரிய தவறு.

இந்த மாநிலத்தை பற்றி எதுவுமே அறியாத இவர், இங்குள்ள மக்களின் பிரச்சனைக்காக பாராளுமன்றத்தில் என்ன செய்யப் போகிறார்? என்று அவர்கள் கோஷம் எழுப்பினர். சுமார் 10 நிமிடம் நீடித்த இந்த நிர்வாண போராட்டத்துக்கு பின்னர் அவர்கள் 6 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

காங்கிரஸ் கட்சியின் வெட்கம் கெட்ட அரசியல் எங்களை நிர்வாண போரட்டத்தில் குதிக்க வைத்துள்ளது.

இந்த வெட்கம் கெட்ட அரசியல்வாதிகளுக்கு முன்பு நிர்வாண போராட்டம் நடத்துவதற்காக நாங்கள் வெட்கப்படவில்லை. இவர்களுக்கு மக்களின் நலனை விட தன்னலமே பெரிதாகி விட்டது என போராட்டக்காரர்களில் ஒருவர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார். (2)


union assurance

இலங்கையில் உள்ள சிறந்த நிறுவனங்களின் வரிசையில் முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் ஜோன்கீல்ஸ் குழுமத்தின் கீழ் செயலாற்றி வரும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனமானது காப்புறுதி வரலாற்றில் முதல் தனியார் காப்புறுதி நிறுவனமாகப் பரிணமித்து 25 வருடங்களைக் கடந்து வாடிக்கையாளர் நலனில் மிகுந்த அக்கறையுடன் பணியாற்றி வருகின்றது. இந் நிறுவனத்தின் சுன்னாகம் காரியாலயம் 2013 இல் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் சிறந்த கிளைக் காரியாலயமாகத் தெரிவாகி வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது. இந்த மகிழ்ச்சியான வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பெருமதிப்பிற்குரிய எமது வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் இந்த வெற்றியை சமர்ப்பணமாக்குகின்றோம்.



திரு. அ.அன்ரன்
பிராந்திய முகாமையாளர்



சிறந்த கிளைக் காரியாலயம்



திரு. ந.பிரகாஷ்,
அலகு அபிவிருத்தி முகாமையாளர்

வாழ்த்துவோர்:-
உத்தியோகத்தர்கள், பிராந்தியக்கிளை, சுன்னாகம்.

(சி-6465)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டப்பட்ட ஆமை இறைச்சி கண்டுபிடிப்பு


(மானிப்பாய்)

சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட ஆமை ஒன்று இறைச்சிக்காக வெட்டப்பட்ட நிலையில் இளவாலை சீந்திப்பந்தல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது




ஆமைகளை பிடிப்பது தடைசெய்யப்பட்ட நிலையில் இளவாலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சீந்திப்பந்தல் கிராமத்தில் சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட ஆமை ஒன்று வீட்டில் வைத்து இறைச்சிக்காக வெட்டப்பட்ட போது இளவாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-9-23)



நன்றி: அததெரண

# பாடசாலை இடை விலகல் சண்டிலிப்பாயில் குறைவு

## சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் தெரிவிப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குள் பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை மற்றும் பாடசாலைக்கு செல்லாது வேலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை என்பவற்றில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என சண்டிலிப்பாய் பிரதேச உதவிப் பிரதேச செயலரும், பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுத் தலை வரு மான திருமதி.நே.செல்வகுமாரி தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் கண்காணிப்புக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதேசத்தின் 28 கிராம சேவகர் பிரிவிலும் சிறுவர் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை சிறப்பாக செயற்படும் பட்சத்தில் பிரச்சினைகள் இல்லாத சிறுவர்கள் உருவாக முடியும்.

கடந்த தை மாதம் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் அடிப்படையில் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாது சுற்றித்திரிந்தமையும சில சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாது வேலைக்குச் செல்வதும் கண்டறியப்பட்டது.

இவர்களுக்கும் இவர்களது பெற்றார் பாதுகாவலர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இதன் பின்பாக பிரதேச செயலக எல்லைக்குள் பாடசாலையை விட்டு இடைவிலகும் மாணவர்களின் தொகை மற்றும் பாடசாலைக்கு செல்லாது வேலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை என்பவற்றில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறான சோதனைகளை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும். இதனூடாக மாணவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக மாற்ற முடியும் என்றார்.

இக் கூட்டத்திற்கு கிராமசேவகர்கள், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர், கல்வி மற்றும் தொழில் திணைக்கள அதிகாரிகள், மானிப்பாய் மற்றும் இளவாலைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார், பிரதம குடும்ப நல உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் எனப்பலர் கலந்து கொண்டனர். (அ-9-23)

# உளம் மகிழ நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யோசப்பாலாவின் உளம் மகிழ...நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் நயப்புரையை மூத்த உள சமூகவளவாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆற்ற வெளியீட்டுரையை மன்னார் தமிழ்ச்சங்க தலைவர் தமிழ்நேசன் அடிகளார் ஆற்றுவார்.

சிறப்புரையை மூத்த பத்திரிகையாளர் ராதேயன் ஆற்றுவார்.

நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை ஞானாலய தலைவர் இ.து.குலசிங்கம் பெற்றுக் கொள்வார். (அ)

# நயினை அம்மன் ஆலய வரலாற்று இறுவெட்டு வெளியீடு

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் ஆங்கில மொழியிலான வரலாறும் மற்றும் ஆலயத்தின் மஹோற்சவ காட்சிகள் அடங்கிய ஒளிப்பதிவு இறுவெட்டும் படத் தொகுப்பும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு அறங்காவலர் சபைத் தலைவர் ப.க. பரமலிங்கம் தலைமை வகிக்க வுள்ளார்.

இதில் பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் கணேசராஜா, கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் வெ.ஞானகாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் விசாகரூபன், யாழ்பல்கலைக்கழக நுண்கலைப்பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.வி.மு.நவரத்தினம் ஆகியோர் ஆற்றவுள்ளனர் சிறப்பு பிரதிகளை நயினை ஆலய அறங்காவலர் சபைத்தலைவர்களும் பிரதிகளை பிரமுகர்களும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (செ-9)

# கண்ணாடி இழைப்படகு எரிந்து நாசம்


வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்கரைப் பகுதியில் தொழில் நடவடிக்கைக்காக விடப்பட்டிருந்த கண்ணாடி இழைப்படகு இனந் தெரியாதோரால் எரியூட்டப்பட்டுள்ளதாக ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. எரியூட்டப்பட்ட படகு மிக மோசமாக சேதமடைந்துள்ளதாகவும் இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-9-64)

# வடக்கின் வெங்காயம் விவசாயிகளை கைவிடாது

## விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்





வெங்காயம் உரிக்கும்போது கண்ணீர் வரலாம். ஆனால், வடக்கின் விவசாயிகளை வெங்காயம் ஒருபோதும் கண்ணீர்விட வைக்காது என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். விதை வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் நேறறு முன் தினம் கைதடியில் வயல் விழா நடைபெற்றது.

யாழ்.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறீபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பொ.ஐங்கரநேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில்,

வெங்காயச் செய்கையில் ஈடுபட்டவர்கள் கடந்த காலத்தில் பொருளாதார ரீதியாக மிக உயர்வான நிலையில் இருந்துள்ளார்கள். வெங்காய வருவாயில் வீடுகட்டிய விவசாயிகளையும் வாகனங்கள் வாங்கிய விவசாயிகளையும் எனக்குத் தெரியும். அந்த அளவுக்கு இலாபம் ஈட்டக்கூடிய ஒரு பயிராக வெங்காயம் இருந்துள்ளது. ஆனால், போர் நல்லவற்றையும் தலை கீழாகப் புரட்டிப்போட்டு விட்டது. இப்போதுதான் எமது விவசாயிகள் மீண்டும் நிமிர்ந்தெழ ஆரம்பித்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டில் வடக்கில் 78ஆயிரம் மெற்றிக் தொன்கள் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இதில் மிகப் பெரும்பங்கு யாழ்ப்பாணத்திலேயே விளைவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் மொத்த வெங்காய உற்பத்தியில் எமது விவசாயிகளின் உற்பத்தி அரைவாசிக்கும் அதிகமாகும். யாழ்ப்பாணத்தில் விளைகின்ற வெங்காயத்தின் தரம் தென் இலங்கை வெங்காயத்தை விட உயர்வானது. எமது வெங்காயத்துக்கான சந்தை வாய்ப்பு எப்போதும் தென் இலங்கையில் இருந்து கொண்டே இருக்கிறது. இதனால் வெங்காய உற்பத்தியை வடக்கில் அதிகரித்தால் அதிக வருவாயை நாங்கள் பெறலாம்.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் புகையிலையை நம்பியிருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால், உலகளாவிய ரீதியில் புகைபிடித்தலுக்கு எதிரான போக்கு உருவாகி வருவ தால புகை யலைச் செய்கை குறைவடைய ஆரம்பிததிருக்கிறது.

அத்தோடு, புகையிலையில், பெரிய இலைகள் தோன்றுவதற்காக அதிக அளவு நைதரசன் பசளைகளை இடவேண்டியுள்ளது. எமது நிலத்தடி நீர் மாசுபட்டதற்கு இந்த புகையிலைச் செய்கைதான் பெருங்காரணமாக இருந்திருககிறது. இதனால், புகையிலைக்கு மாற்றாக விவசாயப் பொருளாதாரத்தை உயாத்தக் கூடிய ஒரு பயிராக இன்று வெங்காயமே உள்ளது.

தரமான வெங்காய விதைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்தியாவிலிருந்தே அதிகம் எடுத்து வரவேண்டியுள்ளது. இதனாலாலேயே வடமாகாண விவசாயத் திணைக்களம் விதைகளை நாமே உருவாகக வேண்டும் என்ற நோக்கில் விதை வெங்காய உற்பத்தியை ஊக்குவித்து வருகின்றது.

அது இப்போது கைதடியில் சாத்தியமாகியும் இருக்கிறது. எமது வெங்காய உற்பத்தியாளர்கள் மீண்டும் பொருளாதார ரீதியாக உயர்வடையும் காலம் வெகுதூரத்தல் இல்லை. அதற்கு நாம் எப்போதும் பக்க பலமாக இருப்போம் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோருடன் விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வளாகத்தில் பல கற்கை நெறிகள் நிறுத்தம்

## கல்வியியலாளர்கள் விசனம்

(பூந்தோட்டம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினால நடத்தப்பட்டு வந்த பல்வேறு கற்கை நெறிகள் நிறுத்தப்பட்டுள்ளமையினால் வன்னி கல்வியியலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா வளாகத்தினால பட்டமேற்படிப்புகள், ஆங்கில டிப்ளோமா, சமூக அபிவிருத்தியும் முகாமைத்துவமும் டிப்ளோமா ஆகிய பாடநெறிகள் உட்பட சில பாடநெறிகள் யுத்தகாலத்தில் நடத்தப்பட்டு வந்த நிலையில் இதன் மூலம பல வன்னி பிராந்திய மாணவர்கள் பயனடைந்திருந்தனர்.

எனினும், யுத்தம் நிறைவடைந்த பின்னர் கல்வி வாய்ப்புக்காக காத்திருக்கும் வன்னி பிராந்திய மாணவர்களின் கல்வி செயற்பாட்டை மழுங்கடிக்கும் வகையில் யாழ்.பல்கலைக் கழகத்தினால இப்பாட நெறிகளுக்கான சந்தர்ப்பங்கள் வவுனியா வளாகத்திற்கு வழங்கப்படாமையினால் உயர்தர பரீட்சையை சித்தியடைந்த மாணவர்கள் உட்பட பட்டதாரிகளும் தமது மேற்படிப்பை வவுனியா வளாகத்தில் மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

குறிப்பாக ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியில் கற்ற பல மாணவர்கள் இன்று ஆசிரியர்களாக உள்ளனர். எனினும் தற்போது அவ்வாய்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதுடன் வேறு பாடநெறிகளும் நிறுத்தப்பட்டுள்ளமையினால் வன்னி பிராந்தியத்தின் கல்வி செயற்பாட்டின் ஒரு பகுதி முடக்கப்பட்டுள்ளதாகவே எண்ணத்தோன்றுகின்றது என்றனர். (அ-9-266)

# வீதிபோக்குவரத்து அதிகாரசபையை அமைப்பது தொடர்பில் ஆராய்வு

(பூந்தோட்டம்)


வடக்கு மாகாணத்தின் போக்குவரத்து ஒழுங்குகளுக்கான வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையை உருவாக்குவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வடமாகாண போக்குவரத்து அமைச்சரின் 101 நாள் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களுக்கிடையிலான கலந்துரையாடலிலேயே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வடமாகாணத்தின் போக்குவரத்து நடைமுறைகள் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந் நிலையில் வட மாகாணத்தில் போக்குவரத்து ஒழுங்குகளை பேணுவதற்காக வீதி போக்குவரத்து அதிகாரசபையொன்றை நியதிச்சட்டத்தின் மூலம் உருவாக்கி நடைமுறைப்படுத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் வட மாகாண தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் 5 மாவட்டங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரன், அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், மன்னார் பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி டபிள்யூ துசார தளுவத்த மற்றும் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ப.ஜெரோம் எமிலியானுஸ் பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (அ-9-266)



வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியாக கடமையாற்றி ஓய்வு பெற்ற க.பேர்ணாட்டின் மணி விழா நிகழ்வுகள் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில், யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பதில் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் மணி விழா நாயகனை பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூந்தோட்டச் செய்தியாளர்)

# கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு அபராதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் உபகரணங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இருவரையும் 5 இலட்சம்ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரித்த நீதிபதி 5 இலட்சம் ரூபாவை தண்டப் பணமாக செலுத்துமாறும் அவ்வாறு பணத்தை செலுத்தத் தவறின் இருவருக்கும் தலா 8 மாத கால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

அத்தோடு கசிப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை அழித்து விடுமாறு பணித்துள்ளார். (அ-9-267)

# இராமனூருக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை

(பூந்தோட்டம்)

வவுனியா புளியங்குளம் பிரதேசத்தில் பல கிராமங்களுக்கு மின்சார வசதிகள் மேற்கொள்ளப்படாமையினால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இராமனூர், பழையவாடி, கல்மடு ஆகிய கிராமங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை மின்சாரம்வழங்கப்படாமையினால்இரவுவேளைகளில் காட்டு யானைகள் கிராமத்திற்குள் உட்புகுந்து பயிர்களுக்கு சேதம் விளைவிப்பதாகவும், திருடர்களின் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.




வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சாரம் தருவதாக விண்ணப்பங்களை மின்சாரசபை பெற்றுக் கொண்ட போதிலும் இதுவரை மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படவில்லை.

ஏ9 வீதியின் அருகாமையில் இருக்கும் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாதது தமக்கு கவலை அளிப்பதாக தெரிவிக்கும் அவர்கள், தேர்தல காலங்களில் மின்சாரம் பெற்றுத்தருவதாக கூறி வாக்குகளை பெற்றிருந்த நிலையிலும் தேர்தல் முடிந்தபின்னர் அவர்கள் கிராமங்களுக்கு வராததுடன் மின்சாரம் வழங்குவதாக வாக்குறுதி அளித்து இறக்கப்பட்ட மின்சார தூண்களையும் தற்போது மின்சார சபையினர் ஏற்றிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கின்றனர். (அ-9-266)

# சிறந்த நூற்தெரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

(பூநகரி)

எழுத்தாளர்களின் சிறந்த நூல்களை தெரிவு செய்து பரிசு வழங்கும் நிகழ்வும் வருடம் தோறும் நடைபெற்று வருகின்றது. அதே போன்று இந் நிகழ்வு இவ் வருடமும் நடைபெறவுள்ளது.

இதன்படி 2013 ஜனவரியில் இருந்து 2013 டிசெம்பர் 31வரை வெளியிடப்பட்ட நூலாசிரியர்கள் இப் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிக்கலாம்.

இப் போட்டியில் உயர் கல்வி ,ஆய்வும் விமர்சனமும், பல்துறை (சமயம், வரலாறு), கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம், மொழி ஆகிய 9 துறைகளிலும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிப்போர் உரிய படிவங்களையும் விபரங்களையும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-84)

# விசுவமடு மகாவித்திக்கு புதிய மைதானம் அமைப்பு

மு/விசுவமடு மகா வித்தியாலயத்திற்கு 400 மீற்றர் ஓடுபாதைகள் கொண்ட மைதானம் புதிதாக செப்பனிடப்பட்டு வருகிறது.

இந்த மைதானம் முன்பு 200 மீற்றர் ஓடுபாதை கொண்டதாக காணப்பட்டது. தற்போது பாடசாலைக் காணி பின்னகர்த்தப்பட்டு மைதானம் விஸ்தரிக்கப்படுகின்றது.

இதற்கு விசுவமடு 12 SLSR படையணியின் உதவியுடனும் கனரக வாகன உதவியுடன் செப்பனிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு பழைய மாணவர்கள் பெற்றோர்களின் பங்களிப்பும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தமுறை நடைபெறும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகள் புதிதாக செய்யப்படும் மைதானத்தில் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# புறநெகும திட்டத்தின்கீழ் நான்கு வேலைத்திட்டங்கள்

(பூநகரி)

புறநெகும மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 28 மில்லியன் ரூபா செலவில் நான்குவேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுநடைபெற்றுவருகின்றது.

இவ்வேலைத்திட்டங்கள் பூநகரி பிரதேச சபையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு துரிதகதியில் நடைபெறுகின்றது.

இதனடிப்படையில் பூநகரி சந்தை மைதானத்தில் 4.3 மில்லியன் ரூபா செலவில் பூநகரி பேருந்து தரிப்பிட நிலையமும் 14.6 மில்லியன் ரூபா செலவில் நாச்சிக்குடா சந்தையும் அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு 7.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின்கீழ் ஜெயபுரம் சந்தைக்கடைத்தொகுதியும் 2 மில்லியன் ரூபா செலவில் நாச்சிக்குடா பேருந்து தரிப்பிட நிலையமும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வேலைகள் அனைத்தும் சில மாதங்களுக்குள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-9-84)

# மாற்றுத்திறனாளிகளுக்கு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கைக்கால் பொருத்துதல், திருத்துதல் போன்ற செயற்பாடுகளை மேத்தா நிறுவனத்தினர் இன்றும் நாளையும் காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை நடாத்தவுள்ளனர்.

முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்திற்கு அருகாமையிலுள்ள கோயிற்குடியிருப்பு கிராம மீனவ சங்க கட்டடத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் விசேட தேவையுடைய மாற்றுத்திறனாளிகளை கலந்துகொள்ளுமாறு முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (செ-9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குற்றமற்ற நகரம்

...மணிவர்மன் அதற்கு சம்மதிக்க, அந்த ஆசிரமத்திலேயே மஞ்சுளாவை எளிமையான முறையில் திருமணம் செய்து கொண்டு, அவளையும் அவள் தம்பிகள் இருவரையும் அழைத்துக்கொண்டு அரண்மனை திரும்பினான்.

ராஜ்யத்திற்குத் திரும்பிய பிறகு, குடிமக்கள் அனைவருக்கும் தனது திருமணத்தை அறிவித்தான். பிறகு, மஞ்சுளாவை அறிமுகப்படுத்தி வைதததான். திருமணத்தையொட்டி அரண்மனையில் நடந்த கோலாகலமான கொண்டாட்டங்களுக்குப் பிறகு, மணிவர்மன் தன் மனைவி மஞ்சுளாவிடம், "இன்றுமுதல் உன் சொற்படியே நான் நடப்பேன்!" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூற, மஞ்சுளா வெட்கத்துடன், "உங்களை வழிநடத்திச் செல்லுமளவிற்கு எனக்கு அறிவுத் திறன் இல்லை" என்று சொன்னவுடன், "அதனால் என்ன! இப்போதும் இந்த வயதிலும் நீ கல்வி அறிவைப் பெறலாம்! அதற்கான ஏற்பாடுகளை உடனே செய்கிறேன்" என்று கூறிவிட்டு, மறுநாளே அறிவில் சிறந்த பண்டிதர்களை அரண்மனைக்கு வரவழைத்து மஞ்சுளா மட்டுமன்றி, அவளுடைய தம்பிகளும் கல்வி பயிலுமாறுச் செய்தான்.



இயற்கையாகவே புத்திக்கூர்மை உடையவர்களாயிருந்த மஞ்சுளாவும், அவளுடைய தம்பிகளும் மிகச் சிறப்பாகக் கல்வி பயின்று, பல விடயங்களையும் கற்றுத்தேர்ந்தனர். மஞ்சுளாவிற்கு அரசியலைப் பற்றியும், ஆட்சி முறைகளைப் பற்றியும் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மஞ்சுளா அனைத்திலும் திறமையுடன் விளங்கினாள. தன் மனைவியைப் பெருமையுடன் நோக்கியவாறே மணிவர்மன், "மஞ்சுளா! இப்போது சொல்! நீ என்ன சொன்னாலும், அதன்படி செய்கிறேன்!" என்றான்.

மன்னருடைய புகழ்ச்சியால் நாணிய மஞ்சுளா, தலைகுனிந்தவாறே, "என் தம்பிகளை உங்களுடைய ஆட்சிக்குட்பட்ட நகரங்களில் நகர அதிகாரிகளாக நியமிக்க ஆசைப்படுகிறேன். அவ்வாறு அதிகாரிகளாக ஆவதற்கு முன், அவர்களுக்கு நகர அதிகாரி ஒருவரிடம் பயிற்சி பெற ஏற்பாடு செய்யுங்கள்!" என்றாள்.

அதுகேட்டு சற்று யோசித்த மன்னன், "இதுவரை என்னுடைய நகர அதிகாரிகளில் சிறப்பாக ஆட்சி செய்பவன் யார் என்ற ஆராய்ச்சியை நான் செய்ததில்லை. அப்படி ஒருவனை இனிமேல்தான் கண்டு பிடிக்க வேண்டும்! எந்த நகரில் குற்றங்கள் குறைவாக உள்ளதோ, அந்த நகர அதிகாரி சிறப்பாக ஆட்சி செய்கிறான் என்று வைத்துக் கொள்ளலாம்." உடனே மஞ்சுளா, "நீங்கள் சொல்வது உண்மைதான். குற்றங்களின் எண்ணிக்கையை விடுத்து, அதிகாரிகள் வழங்கிய கடுமையான தண்டனைகளைப் பட்டியலிட்டால், அதை வைத்து எந்த நகரில் கொடிய குற்றங்கள் அதிகம் என்று கண்டு பிடிக்கலாம். அதாவது, தூக்கு, ஆயுள் தண்டனை, நாடு கடத்துதல் ஆகிய கடுமையான தண்டனைகளை மட்டும் பட்டியல் இடுங்கள். இத்தகைய தண்டனைகளை வைத்து, எந்த நகரில் கொடிய குற்றங்கள் குறைவு என்பதை கணக்கிடலாம்!" என்றாள்.

அவளுடைய கருத்தை ஒப்புக் கொண்ட மணிவர்மன், உடனே கடந்த பத்து ஆண்டுகளில் நகர அதிகாரிகள் வழங்கிய தண்டனைகளைப் பட்டியலிட்டு அனுப்ப உத்தரவிட்டான்.

மன்னரின் கட்டளையின் உள் நோக்கம் பல அதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டது. அதனால், அவர்களில் பலரும தாங்கள் வழங்கிய தண்டனைகளின் பட்டியலில், கடும் தண்டனைகள் பலவற்றை நீக்கி, புதிதாகப் பட்டியல் தயாரித்தனர்.

சங்கரன் குடும்பத்தை நாடு கடத்திய சோமனும் அவர்களில் ஒருவன். மற்ற நகரங்களைவிட தனது நகரத்தில் கடுமையான தண்டனைகள் குறைவு என்று நிரூபிக்க, கடும் தண்டனைகளை இரத்து செய்து, புதுப்பட்டியல் தயாரித்து அனுப்பினான்.

எல்லா அதிகாரிகளிடமிருந்தும் பெற்றப் பட்டியல்களை ஒப்பிட்டுப் பார்த்த மன்னன் மஞ்சுளாவிடம், "கபாலபுரத்தைச் சேர்ந்த நரேந்திரன் தான் அதிகமான தண்டனைகள் விதித்துள்ளான். சோமன் கடுமையான தண்டனை விதிக்கவில்லை! ஆகையால் அவனிடம் உனது தம்பிகளை அனுப்பலாம்" என்றான்.

உடனே அவள் மணிவர்மனை நோக்கி, "என் தம்பிகளை நரேந்திரனிடமே பயிற்சிக்கு அனுப்புங்கள். சோமனுக்கு, காட்டில் வசிக்கும் என் பெற்றோரை சகல மரியாதைகளுடன் நமது அரண்மனைக்கு அழைத்து வரும் பொறுப்பைக் கொடுங்கள்!" என்றாள். மனைவியின் சொல்லைத் தட்ட விரும்பாத மன்னனும் அப்படியே செய்தான்.

(முற்றும்)

---

02.2014
**10**

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1355 - இங்கிலாந்து, ஒக்ஸ்போர்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலவரத்தில் 63 மாணவர்களும், 30 பொது மக்களும் கொல்லப்பட்டனர்.
- 1763 - பிரான்ஸ் கியூபெக் மாநிலத்தை ஐக்கிய இராச்சியத்திற்கு அளித்தது.
- 1798 - லூயி அலெக்சாண்டர் பேர்த்தியர் ரோமைக் கைப்பற்றி அதனை பெப்ரவரி 15 இல் ரோமன குடியரசாக அறிவித்தான்.
- 1815 - கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.
- 1846 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பஞ்சாபின் சீக்கியருக்கும் இடையில் இடம் பெற்ற போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றனர்.
- 1863 - அலன்சன் கிரேன் தீயணைக்கும் கருவியின் காப்புரிமம் பெற்றார்.
- 1870 - கிறிஸ்தவப் பெண்கள் இளையோர் அமைப்பு அமைக்கப்பட்டது (நியூயோர்க் நகரம்).
- 1897 - மடகஸ்காரில் மதச் சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.
- 1914 - யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக சார்ள்ஸ் கம்பர்லாண்ட் நியமிக்கப்பட்டார்.
- 1931 - புதுடில்லி இந்தியாவின் தலைநகராக்கப்பட்டது.
- 1954 - வியட்நாம் போர்: அமெரிக்க ஜனாதிபதி டுவைட் ஐசன்ஹோவர் வியட்நாம் மீது ஐக்கிய அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என எச்சரித்தார்.
- 1969 - தமிழ் நாட்டின் முதலமைச்சராக மு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்டார்.
- 1991 - வன்னி மீதான இலங்கை இராணுவத்தினரின் வன்னி விக்கிரம படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதுடன் உலங்குவானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1996 - சதுரங்கக் கணினி "டீப் புளூ" உலக முதற்தரவீரர் காரி காஸ்பரோவை வென்றது.
- 2009 - தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் இரிடியம் 33, காசுமசு-2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்தன.

### பிறப்புகள்


- 1887 - ஜோன் என்டேர்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1985)
- 1890 - போரிஸ் பாஸ்டர்நாக், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1960)
- 1902 - வால்ட்டர் பிராட்டன், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1987)
- 1910 - ஜோர்ஜஸ் பயர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1969)

### இறப்புகள்

- 1837 - அலெக்சான்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர் (பி. 1799)
- 1912 - ஜோசப் லிஸ்டர், பிரித்தானிய அறிவியலாளர் (பி. 1827)
- 1918 - ஏர்னெஸ்டோ மொனெட்டா, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர் (பி. 1833)
- 1923 - வில்ஹெல்ம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி. 1845)

---

### ஜோசப் லிஸ்டர்



ஜோசப் லிஸ்டர் இங்கிலாந்தில் உள்ள அப்டன் என்னும் ஊரில் 1827 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி பிறந்தார். தந்தை ஜோசப் ஜாக்சன் லிஸ்டர். இவர் நவீன உருப்பெருக்கியை உருவாக்கியவர்.

ஜோசப் லிஸ்டர் லண்டனிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியில் கல்வி பயின்றார். மிகச் சிறந்த மாணவராகத் திகழ்ந்த இவர் 1852 ஆம் ஆண்டில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார். இவர் அறுவை சிகிச்சையில் நோய நுண்மத்தடை (Antiseptic) முறைகளைப் பயன்படுத்துவதைக் கண்டு பிடித்த பிரித்தானிய அறுவை சிகிச்சை வல்லுநர் ஆவார். விக்டோரியா அரசியாரின் சொந்த மருத்துவராகப் பணிபுரிந்தவர். அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தும் மருத்துவக் கருவிகளை கொதிக்க வைப்பதன் மூலம் நோய் நுண்மங்களை ஒழிக்க முடியும் எனக் கண்டறிந்தவர்.

தற்போது "பினாயில்" என்றழைக்கப்படும் கார்போலிக் அமிலத்தினால் காயங்களில் உள்ள நோய்க் கிருமிகளைத் தடைசெய்ய முடியும் எனவும் கருவிகளை சுத்திகரிக்க முடியும் எனவும் கண்டறிந்த அறிவியலாளர் ஆவார்.

அறுவை சிகிச்சை பிரிவுக்கு பொறுப்பாளராக இருந்த இவர் அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏராளமான நோயாளிகள் இறந்து போவது கண்டு வருந்தினார். அறுவை சிகிச்சைக்குப் பிறகு இழைய அழுகல் போன்ற கொடிய நோய்கள் பெரும்பாலும் பீடிப்பதை இவர் கண்டார். .

1865 ஆம் ஆண்டில் லூயி பாஸ்டர் எழுதிய ஆய்வுக் கட்டுரையொன்றை லிஸ்டர் படித்தார். பின்னர். நோய் நுண்மங்களினால் தொற்று நோய்கள் உண்டாகின்றன. எனில், திறந்த புண்களினால் நோய் நுண்மங்கள் நுழைவதற்கு முன்பாக அவற்றை அழித்துவிடுவதுதான் அறுவை சிகிச்சைக்குப் பின்னர் ஏற்படும் மரணங்களைத் தடுப்பதற்கு சிறந்த வழி என லிஸ்டர் கருதினார்.

லிஸ்டரின் கண்டுபிடிப்புகள் அறுவை சிகிச்சைத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தின. லிஸ்டர் தமது தலைசிறந்த பணிக்காக ஏராளமான விருதுகளைப் பெற்றார். இவர் வேந்திய அறிவியல் கழகத்தின் (Royal society) தலைவராக 5 ஆண்டுகள் பணியாற்றினார். இவர தனது 85 ஆவது வயதில் 1912 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி இங்கிலாந்திலுள்ள வால்மர் நகரில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...கருப்பர் ஆலயம் இருக்கும் இடம் முன்பு கரடி, யானை ஆகிய மிருகங் கள் தங்குமிடமாக இருந்தது என்றும் மீனாட்சியம்மாள் வரவுக்குப் பிறகு அவைகள் இங்கு வந்து பக்தர் களைத் தொந்தரவு செய்வதில்லை என்றும் கூறப்படுகிறது.


அவரின் பெருமைகளைக் கேட்டு அவரிருக்கும் திசை நோக்கி வணக் கம் செலுத்திவிட்டு மேலே தொடர் கிறோம்.

இங்கிருந்து சதுரகிரிக்கு பயண த்தை துவங்கும் அனைத்து பக்தர் களுக்கும் மகாலிங்கத்தைத் தரிசிப் பதில் எவ்வித இடையூறுகளும் ஏற் படக் கூடாது என்பதற்காக கருப் பண்ண சாமி சித்தர்களின் உத்தரவுப் படி பைரவரின் அம்சமான நாய்களை அனுப்புவாராம். சில சமயம் சித்தர் களின் அருள்பெற்ற பக்தர்கள் மகா லிங்கத்தைத் தரிசிக்க மலையேறும் போது சித்தர்களேகூட நர்யின் வடிவில் அவர்களுக்குத் துணையாக வருவார்களாம்.

சில சமயங்களில் வழி தவறி விடும் பக்தர்களுக்கும் காட்டு மிருகங்கள் வரவை உணர்த்தும் வழிகாட்டிகளாகவும் இந்தப் பைரவர், கள் செயற்படுவார்களாம்.

நமக்கு முன்னே செல்லும் நாயைப் பார்த்தபடி பயணத்தை நாம் தொடர்ந் தால் நம்மைப் பத்திரமாக மகாலிங்கர் சன்னதிக்குக் கூட்டிக்கொண்டு போய் விடுமாம்.

நம்புவதற்குச் சற்று சிரமமான விடயம்தான். நாம் கொண்டு செல்



லும் உணவுப் பண்டங்களுக்காக நம்மைப் பின்தொடரும். இதனைப் போய் இப்படிச் சொல்லுகின்றார்களே என்றார் நண்பர் சாக்ரடீஸ்.

அப்படியா! நீங்கள் பையில் வைத்திருக்கும் உணவை நமக்கு முன்னே செல்லும் அந்த நாய்க்கு வையுங்களேன். நீங்கள் சொல்வது உண்மையானால் அதனைத் தின்று விட்டு இங்கேயே தங்கிவிடும் என்றார் கோமதிநாயகம்.

நான் மட்டும் மௌனமாயிருந்தேன்.

தான்கொண்டு வந்த ருசிமிக்க பொட்டலத்தைப் பிரித்து அதன்முன் காட்டினார். முகர்ந்து பார்க்கக்கூட மறுத்தது. நாய்க்குப் பொறை என்றால் வெகு இஷ்டமாமே- பொறையும் வைக்கப்பட்டது. ம்ஹூம், அசையக் காணோம்.

நின்று கொண்டிருந்த நாய் இப் பொழுது குரைக்க ஆரம்பித்தது. லொள்... லொள்...!

இன்னும் என்ன வெட்டி விளை யாட்டு. சன்னத்திக்குப் போகிற வேலையைப் பாருங்கள் என்று எச்சரிப்பது போலிருக்கவே பைரவ

**ஆன்மீகம் 29**

பரிசோதனையை முடித்துக் கொண்டு பயணத்தைத் துவங்கினோம்.

எங்களுக்கு முன்னே நாய் வழி காட்டிச் சென்றது.

ம்.... என்னவோ அதிசயமாகத் தான் இருக்கிறது என்று பெருமூச்சு விட்டபடி பயணத்தைத் தொடர்ந்தார் சாக்ரடீஸ்.

### குதிரைக்குத்திப் பாறை


சர்ரென்று ஒரு பள்ளம். அதனைத் தொடர்ந்து பெரியதொரு மலைப் பாறை ஏற்றம். இந்த இடத்திற்கு குதிரைக்குத்திப் பாறை என்று பெயர்.

அந்தக் காலத்தில் ராஜாக்கள், ஜமீன்தார்கள் ஆகியோர் இந்த மகாலிங்கரை வழிபட வரும்போது தங்களது குதிரைகளை இங்கேதான் நிறுத்துவார்களாம். இதற்குமேல் குதிரையில் செல்ல முடியாததால் இங்கேயே கட்டி வைத்து வேலை யாளை காவலுக்கு வைத்துச் செல் வார்களாம். இங்கே ஓர் ஊற்று உள்ளது. அதன் பெயர்தான் குதிரை யூத்து. குதிரைகள் இந்த ஊத்துத் தண்ணீரைக் குடித்து இளைப்பாறி இருக்குமாம்.

*(தொடரும்)*




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



**41**

"...அதிலே 'வாட்டர் பேலே' பார்த்தீரே. அதை எடுக்க மட்டும் நாலு



எம்.ஜி.ஆர். தனது அன்னைக்கு கட்டிய கோவில்

லட்சம் செலவு. மேடையிலே ஒரு சின்ன கண்ணாடி அணை. அதற்குள் பேலே... ரெகுலர் ஷோ நடக்கும் போது பார்க்கிறவங்களுக்கு தொல் லைன்னு ஷூட் பண்ணவிடலே.

ஒரு ஷோவுக்கு வசூல் நம்ம நாட்டு கணக்குப்படி ஒண்ணே முக்கால் லட்ச ரூபாய். நான் டபுள் பணம் கொடுத்து ஷூட் செய்தேன். மூணு கேமரா ஒர்க் செஞ்சது. ஷோ டைம் 70 நிமிஷம்தான். நாங்க கிட்டத்தட்ட 2 மணி நேரம் எடுத் தோம்.

ஒரு நடிகை ஐஸ்கிரீம். சொந்தக் காசிலே வாங்கி சாப்பிட்டதை கண்டிச்சேன். "அம்மா நீ என் ஆர்டி ஸ்ட். என் விருந்தாளி. இது என்னை அவமதிக்குற மாதிரி இருக்கு. உனக்கு இஷ்டமானதைச் சாப்பிடு. ஒரு நாளைக்கு 10 ஐஸ்கிரீம் வேணுனாலும் சாப்பிடு" என்றேன்.

இந்த வார்த்தையை எல்லோரும் பயன்படுத்திக்கிட்டார்கள். டோக் கியோ ஹில்டன் ஹோட்டல்லே ஐஸ் கிரீம் பில் மட்டும் எண்பத்தி நாலா யிரம் ரூபாய்!

வேடிக்கை என்ன தெரியுமா?

பொழுது விடிஞ்சு ஊருக்கு திரும்பிப் போறோம். அந்த இரவே ஓட்டல் பில் கிளியர் பண்ணிட்டோம். நானும் முதல்லே புறப்பட்டுட்டேன். மத்தவங்க போகும்போது சாப்பிடலா மேன்னு ஒண்ணா, ரெண்டா சாப் பிட்டாங்க, சர்வர்பில்லை நீட்டிட்டார். அவ்வளவுதான். வெளிநாட்டுலே பணத்தோட சிரமத்தை புரிஞ்சுக் கிட்டாங்க என்று சிரித்தார் அந்த இக்கட்டான நேரத்திலும்.

சத்யா ஸ்டுடியோ வந்ததும் ஒப்பனையைத் துவக்கினார் பீதாம் பரம். இந்த விடயத்தை அவர் முன்பே அறிந்து இருந்தார்.

இந்த மகாராஜன் ஸ்டே கொடுக் கிறார் இல்லே. அதுக்காக நீங்க ஏன் காலி செய்யணும்? இது விளை யாட்டா என்ன? என்றார்.

அதுக்கு என்ன பண்றது? நீதிக்கு தலை வணங்கித்தான் தீரணும் என்றார் செம்மல்.

ஒப்பனை முடிந்து உடையணியும் போது "ரவீந்திரன்! இந்த டைட்டில் நல்லாயிருக்குல்லே. *நீதிக்கு தலை வணங்கு*. ஒரு படத்துக்கு வைப் போம்" என்று சொல்லிக் கொண்டே படப்பிடிப்பிற்கு போய்விட்டார்.

தொல்லையான அந்த நேரத்திலும் தொழில் மேல் உள்ள அக்கறை அப்படி!

பகல்வரை காத்திருந்தோம் குஞ்சப் பன் போனுக்காக.

சேதி வந்தது-ஸ்டே கிடச்சுட்ட தாக. ரிசீவரை வைத்துவிட்டு "சரி எல்லோரும் வ ாங்க நிம்மதியா சாப் பிடுவோம்" என்று பந்தியில் உட்கார்ந் தார் செம்மல்.

### அவன் விரலசைத்தால்.....

பொன்மனச் செம்மலிடம் நான் வியந்து போற்றும் குணங்களில் அவரது அடக்கமும் பணிவும் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டி யவை.

எவ்வளவோ உயர்வில் இருந்தும் அவர் தன்னை உயர்த்திச் சொல்வ தில்லை.

ஒரு படத்தில் என் விரல் அசைந் > V _ என்று கவிஞர் எழுதியதை அவன் விரல் அசைந்தால் என்று மாற்றும்படி சொன்னார்.

அவர் பாடும் பாடல்களில் தற் புகழ்ச்சி இருப்பதில்லை.

நான் நல்லவன். வல்லவன். புலி, சிங்கம்னு பாடியதில்லை.

உலகம் அறிந்த தன்னையே என்னைத் தெரியுமா? என கேட்டுப் பாடியவர் அவர்.

பாட்டில் பணிவிருக்கும். ஆணவம் இருக்காது.

கால் மேல் கால் போட்டு எப்போதும் எங்கும் உட்காரமாட்டார் செம்மல். மற்றவர்கள் அப்படி இருப்பதும் அவருக்குப் பிடிக்காது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை மனுக்கள் மீதான முடிவை கிடப்பில் போடாதீர்!

## உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு

கருணை மனுக்கள் மீதான முடிவை கிடப்பில் போடுவது சரி யாகாது என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ப.சதாசிவம் தெரிவித்துள்ளார்.

சட்டப்பிரிவு 21இன் படி மரண தண்டனை கைதிக்கும் சட்ட பாது காப்பு பெறும் உரிமை இருக்கிறது என அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்: "கருணை மனுக்களை ஏற்று மரண தண்டனையை ஆயுளாக குறைப்பதால் பெருங்குற்றங்கள் செய்தவர்களுக்கு சலுகை அளிக்கப்படுகிறது என அர்த்தம் இல்லை. அதே வேளையில், கருணை மனுக்கள் மீது முடிவு செய்வதில் காரணமற்ற தாமதமும் கூடாது.

ஒரு மரண தண்டனை கைதிக்கு கருணை கோர உரிமை இருக் கிறது, அதை வழங்குவதா இல்லை நிராகரிப்பதா என்ற முடிவை எடுப்பது நீதிமன்றத்தின் அரசியல் சாசன கடமையாகும்.

கடந்த மாதம் 15 பேர் தூக்கு தண்டனையை ஆயுளாக குறைக்கப் பட்டு அளிக்கப்பட்ட தீர்ப்பின் பின் னனியில், கருணை மனுக்கள் மீது முடிவு எடுக்க காலம் தாழ்த்தியதே காரணமாக இருந்தது. கருணை மனுக்களை நிராகரிக்க காலம் தாழ்த்தப்பட்டதால் 15 பேரில் இருவர் மனநலன் பாதிக்கப்பட்டிருந்தது. உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தெரி வித்திருந்தது போல் கருணை மனுக கள் நிராகரிக்கப்பட்டால் அந்த தகவல் உடனடியாக உறவினர்களுக்கு தெரி விக்கப்பட வேண்டும். இவ்வாறு "சதாசிவம் தெரிவித்தார். (அ-2)

# புனர்வாழ்வு பெற விரும்பும் அரசியல் கைதிகளிடம் கடிதங்கள் சேகரிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற விரும்பும் தமிழ்அரசியல்கைதிகளிடம்கடிதங்கள சேகரிக்கும் செயற்பாடு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் மேற் கொள்ளப்பட்டு வருவதாக மகசின் சிறைச்சாலையின் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து வெளி வந்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர இவ்வாறு தமிழ் அரசியல் கைதி களிடம் சிறைச்சாலை அத்தியட்சகர கடிதம் கோரியிருந்ததாகவும் அதன டிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் புனர்வாழ்வு பெற விரும்புவதாக கடிதங்களை வழங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பு புதிய மகசின் சிறைச் சாலையில் சுமார் 120 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள்.

இவ்வாறு நாட்டில் பல பாகங் களிலும் உள்ள சிறைச்சாலை களிலும் கணிசமான தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட கால மாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டும் சுமத்தப்படாமலும் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட் டிருக்கும் தமிழ் அரசியல் கைதி களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரணைகளை துரிதப் படுத்தி சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகளும் பல்வேறு அமைப்புக்களும் தொடர்ச்சியாக அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

அதேபோன்று தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் அவர்களது உற வினர்கள் தமக்கு நியாயம் பெற்றுத் தருமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதங்களையும் அனுப்பி வைத் துள்ளனர்.

இவ்வாறானநிலையில்அண்மையல் மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரை யாற்றிய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தமிழ் அர சியல் கைதிகள் தாமாக விரும்பி னால் அவர்களுக்கு புனர்வாழ்வளிக் கலாம் என தெரிவித்திருந்ததாக குறிப்பிடப்படுகிறது.

புனர்வாழ்வு பெற விரும்பும் தமிழ் அரசியல் கைதிகள் சிறைச் சாலை அத்தியட்சரின் ஊடாக சட்ட மா அதிபருக்கு விலாசமிட்டு தமது கடிதங்களை வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது.

அதேவேளை தமது விடுதலை அல்லது புனர்வாழ்வு தொடர்பில் ஜனாதிபதி நியாயமான தீர்வொன்றைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி பகிரங்க மடலொன்றினை தமிழ் அரசியல் கைதிகள் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# திருகோணமலை பிரதேசத்திற்கென கல்வியியற் கல்லூரி அமைப்போம்

## அமைச்சர் பந்துல உறுதியளிப்பு

கிழக்கு மாகாணத்தில் மஹிந்த ராஜபக்ஷ சிறப்பு பாடசாலை இந்த வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

மஹிந்தோதயவேலைத்திட்டத்தின் கீழ் தமிழ், சிங்களம் ஆகிய மொழி களில் கற்றல் செயற்பாட்டினை மேற் கொள்ளும் இந்த பாடசாலையை திருகோணமலை மாவட்டத்தில் நிர் மாணிக்கவுள்ளதாக அவர் குறிப் பிட்டார்.

நெசன செயற்றிட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை களுக்கு தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை உவர்மலை விவேகானந்த கல்லூ ரியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில்உரையாற்றியஅவர், மகிந்த ராஜபக்ஷ சிறப்பு பாட சாலை தற்போது சகல மாகாணங் களிலும்ஆரம்பிக்கப்பட்டுவருகின்றது. இந்த பாடசாலையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் சம காலத்தில் கற்றல் கற்பித்தல் நட வடிக்கைகள் நடைபெறவுள்ளன.

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். அத்துடன் திருகோணமலைபிரதேசத்தில் கல்விக் கல்லூரி ஒன்று இல்லை என்ற குறை மிக நீண்ட காலமாக உள்ளது. இந்த ஆண்டில்கல்வியியற்கல்லூரியொன்றை இங்கு ஆரம்பித்து வைக்கவுள் ளோம் என்றார். (அ-2)




சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கை சுன்னாகம் வயல், தோட்டவெளிகளில் இடம்பெற்ற போது...

(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# ஐ.நா.சபை உதவிச் செயலாளர் நாயகம் மக்கள் பிரதிநிதிகளை சந்திக்க வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி

ஐக்கிய நாடுகள் உதவிச் செய லாளர் நாயகம் சிவில் அமைப்பு களையும் மக்கள் பிரதிநிதிகளை யும் சந்திப்பதன் மூலமே உண்மை நிலையை அறிந்து கொள்ள முடி யும். அவரை சந்திப்பதற்கு நாம் காத்திருக்கின்றோம் என வட மாகாண சபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் உதவி செய லாளர் நாயகம் ஹோலியங் சூ இலங்கை வந்துள்ளார். அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயத்தை மேற்கொண்டு அங்குள்ள சிவில் அமைப்புகளின் பிரதி நிதிகளை யும் சந்தித்து உரையாட இருப்பது டன் வாழ்வாதாரம் அளிக்கப்பட்ட வேலைத் திட்டங்களையும் பார் வையிடுவார் என்ற தகவலின் அடிப்படையிலேயே அவர் மேற்க ண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு, கிழக் கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 89 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் வாழ்வாதாரம் இன்றி வறுமையா லும் பல்வேறு பிரச்சினைகளினா லும் மிகுந்த நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளனர்.

அத்துடன் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்கள் தற்கொலை முயற்சிக்கு போகுமளவுக்கு விரக்தியடைந் துள்ளனர். அதுவுமின்றி சமூக நெருக்கடிகளையும் சுய பாதுகாப்பு நெருக்கடிகளையும் தினந்தோறும் அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் அரசாங்கமோ இவர்க ளுக்கான வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்து விட்டோமென உலகத்துக்கு பொய் கூறி வருகிறது. ஜெனீவாவி லிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வருகின்ற இராஜதந்திரிகளுக்கு எதை எதையோ காட்டி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மை நிலை அறிய[illegible] வேண்டுமானால் வரும் பிரதிநிதி களும் இராஜதந்திரிகளும் பாதிக்கப்ப ட்ட மக்களை நேரடியாக சந்திப்ப தன் மூலமும் மக்கள் பிரதிநிதிகளி டம் கேட்டறிவதன் மூலமுமே உண்மைகளைக்கண்டறிய முடியும். வரவிருக்கின்ற ஐ.நா. சபையின் உதவிச் செயலாளர் அதை செய் வார் என பூரணமாக நம்புகின்றோம்.

இன்று வடகிழக்கிலுள்ள பெருந் தொகையான மக்கள் யுத்தத்துக்குப் பின் தமது பாரம்பரிய தொழில் களையோ பிரதேச தொழில்க ளையோ செய்ய முடியாமல் திட்ட மிட்ட முறையில் கிராமங்களை விட்டு கலைக்கப்படுகிறார்கள்.

விவசாயம் செய்யவோ மீன்பிடி க்கவோ முடியவில்லை. தமது பிர தேசங்களிலுள்ள மூலவள தொழில் களைக் கூட செய் ய முடியவில்லை.

இறுதிப் போரின் போது ஐக்கிய நாடுகள் சபையினாலும் கைவிடப்பட்ட இனமாக தமிழ் இனம் ஆக் கப்பட்டது. இந்தத் தவறின் கார ணமாக ஆயிரக்கணக்கான அப் பாவி மக்களை நாம் இழந்துள்ளோம்.

இந்த விதமான தவறு ஒன்று உலகில் எந்த நாட்டிலும் இனி வருங்காலங்களில் ஏற்படாமல் தடு க்க வேண்டுமானால் ஐக்கிய நாட் டின் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக சந்திப்பதன் மூலமே தமது தவறுகளை உணர் ந்து கொள்ள முடியும்.

போரின் பின் அரசாங்கத்திடம் சரணடைந்து காணாமல் போனோர் சம்பந்தமான உண்மையான நிலை வரங்கள் இன்னும் வெளிக் கொண்டு வரப்படவில்லை. இதைக கண்டறி வதற்கு ஜனாதிபதியினால் நியமிக் கப்பட்டிருக்கும் ஆணைக்குழுவும் உண்மைகளை நடுத்தன்மையு டன் நின்று வெளிக்கொண்டு வரு வார்கள் என்று எமக்கு நம்பிக்கை யில்லை. மிக நீண்டகாலமாகவே சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்பதை சர்வதேசத்துக்கு நாம் தெரியப் படுத்திக் கொண்டிருந்தாலும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை காணு வதென்பது கஷ்டமாகவேயுள்ளது.

வாரா வாரம் வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் இராஜதந்திரிகளையும் நாம் சந் தித்து நிலைமைகளை விளக்கி வருகின்ற போதும் எவ்வித பயனு மில்லை.

அரசாங்கம் காலம் கடத்து வதிலும் கால அவகாசம் கேட்பதி லும் காட்டுகின்ற அக்கறையில் அரசியல் தீர்வைத்தர முயற்சிக்கு மானால் நாடு நல்லிணக்கத்தை இதுவரை கண்டிருக்கும். நல்லிண க்க ஆணைக்குழுவின் பரிந்துரை கள் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தரும் விடயமாக இல்லாத போதும் அதைக்கூட நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் காட்டுகிற அசமந்தப் போக்கை உலகமறியும்.

எனவே தான் இவையெல்லா வற்றுக்குமான முடிவாக இருக்கக் கூடிய சர்வதேச விசாரணை யொன றைக் கொண்டுவர உலக நாடுகள் தீவிர முயற்சி காட்ட வேண்டும் எனஅவர் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேசிய பிரச்சினைக்கு தீர்வைத்தராது-பொதுபலசேனா

**அனைத்து மக்களின் மனங்களை கவரும் வகையிலான வேலைத் திட்டமின்மை மற்றும் முறையான வெளிநாட்டுக் கொள்கையின்மை போன்ற காரணங்களினாலேயே இந்தளவு சர்வதேச அழுத்தங்களுக்கு நாடு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

தனிப்பட்ட கோபதாபங்களுக்காகவும் அரசியல் சுய இலாபங்களுக்காகவும் தாய் நாட்டை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கக்கூடாது. எனவே நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் பொதுவான விடயங்களுக்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மீதோ அல்லது இந்த அரசாங்கத்தின் மீதோ உள்ள தனிப்பட்ட கோபங்களுக்காக இலங்கை பற்றிய தேவையற்ற விடயங்களை எவராவது வழங்குவாரானால் அதனால் ஏற்படும் பாதிப்பு ஜனாதிபதிக்கோ இந்த அரசாங்கத்துக்கோ மாத்திரமல்ல மாறாக இந்த நாட்டுக்கே பாதிப்பு.

எனவே, இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. ஆனால் அதற்காக சர்வதேசத்திற்கு அரசைப் பற்றி தகவல் வழங்குவது உகந்ததல்ல.

மாகாண சபை மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று கூறப்பட்டது. ஆனால் அது சாத்தியமில்லை என்பதை தற்போது காண முடிகின்றது. வட மாகாண சபை தேர்தல் முடிந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கு ஆட்சியமைத்துள்ளது. இருந்த போதும் தமிழர்களது பிரச்சினை தீர்ந்தபாடில்லை. எனவே இந்த யதார்த்த நிலையினை அரசாங்கமும் தமிழ் கூட்டமைப்பினரும் உணர வேண்டும். எனவே, மாகாண சபை முறைமையை விட வேறு நல்ல முறைமையினை ஏற்படுத்த வேண்டும்.

வட மாகாண மக்களில் பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு அம்மக்களின் மனங்களை வெற்றி கொள்ளும் வகையிலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதேபோன்று இலங்கைப் பிரச்சினைகள் என்ற வகையில் தமிழ், சிங்களம் என்ற இன வேறுபாடுகளை மறந்து தாய் நாட்டை நேசிக்க வேண்டும்.

மனித உரிமைகள் பிரச்சினையினை மேற்குலகம் தமது அரசியல் ஆயுதமாக பயன்படுத்துகிறது. மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற சர்வதேச நாடுகள் புலிகள் இயக்கம் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் பற்றி பேசுவதில்லை. எனவே அவர்களது சுயாதீனமற்ற செயற்பாட்டினை நன்றாக அறிய முடிகின்றது.

அரசாங்கமும் இவ்வாறான சர்வதேச அழுத்தங்கள் நாட்டுக்கு வராத வகையிலான வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் சர்வதேச நாடுகள் தேவையற்ற வகையில் எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிடாது.

சில மேற்குலக நாடுகள் தங்களது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எமது நாட்டுக்குள் காலூன்றுவதற்கு சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. எனவே அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் வழிசமைத்துவிடக் கூடாது. அதன் பாரதூரத்தை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நாட்டைப் பீடித்திருந்த யுத்தம் தற்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. யுத்தத்தில் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் அவ்வாறானதொரு நிலைமை தற்போது இல்லை. எனவே அந்த யதார்த்தத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டுமொரு யுத்தத்திற்கோ, பிரிவினை வாதத்திற்கோ இடமளிக்கக் கூடாது. அரசாங்கமும் இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையிலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ-2)



யூனியன் இன்சூரன்ஸ் சுன்னாகக் கிளையின் ஆயுட் காப்புறுதியாளரான திருநெல்வேலியைச் சேர்ந்த அ.ஜோர்சின் மரண இழப்பீட்டுத் தொகையை அவரின் மனைவியிடம் சுன்னாக பிராந்திய முகாமையாளர் கையளிக்கும் நிகழ்வில் அபிவிருத்தி முகாமையாளர்கள் அருகில் நிற்பதை படத்தில் காணலாம்.

## நான் இலங்கை செல்வதற்கு கடவுள் துணை புரிவார்

### பாப்பரசர் தெரிவிப்பு

நான் இலங்கைக்கு செல்வதற்கு கடவுள் வழியேற்படுத்துவார் என்று பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார். இத்தாலியில் உள்ள இலங்கையர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே பாப்பரசர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு வருமாறு தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை தாம் வரவேற்பதாகவும் பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

கொழும்பின் பேராயர் கர்தினால் ரஞ்சித்தின் தலைமையிலான குழுவே பாப்பரசரை சந்தித்தது.

இரண்டாம் உலகப் போரின் போது அப்போதைய கொழும்பு பேராயர் ஜீன்மாரி மாசன், கொழும்புக்கு வெளியில் உள்ள தெவத்த என்ற இடத்தில் மேரி மாதாவின் சிலையை நிறுவினார்.

இது குறித்து கருத்துரைத்த பாப்பரசர், மேரி மாதா என்றும் எம்முடன் இருப்பதாக குறிப்பிட்டார். எனவே அவர் தமது பயணங்களுக்கு துணையிருப்பார் என்றும் பாப்பரசர் கூறினார்.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று கூறப்படும் இலங்கையில் கடந்த காலங்களில் பாரிய பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டன.

இதன் காரணமாக இந்து சமுத்திரத்தின் முத்துவில் இருந்து கண்ணீர் சொரியப்பட்டது. துரதிஷ்டவசமாக உள்நாட்டுப்போர்காரணமாக பலர் பாதிக்கப்பட்டதுடன் பாரிய சேதங்களும்ஏற்பட்டன. இந்நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல.

எதிரியை ஒன்றிணைப்பதற்கு நேற்றைய காயங்களின் வடுக்களும்ஒத்துழைப்புமே துணை புரியும்.

நம்பிக்கை மூலமே சமாதானத்தையும் அபிவிருத்தியையும் அடைய முடியும் என்றும் பாப்பரசர் குறிப்பிட்டார். (அ-2)

## சூதாட்டக்காரர்கள் 82 பேர் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பு, புறக்கோட்டையில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 82 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புறக்கோட்டை, ஓல்கோட் மாவத்தை மற்றும் மல்வத்த வீதி உள்ளிட்ட 5 இடங்களில் பொலிஸார் நேற்று முன்தினம் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், சட்டவிரோதமான முறையில் சூதாட்டத்தில் ஈடுபட்ட முகாமையாளர்கள் 82 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் அறிவித் துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## ஜெனீவா பிரேரணைக்கு அரசாங்கமே பொறுப்பு

### தம்மரஅமிலதேரர் தெரிவிப்பு

ஜெனீவா மனித உரிமையாளர் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்க பிரேரணை முன்வைக்கப்படுவதற்கு வழிவகுத்தது இலங்கை அரசாங்கமே என்று விரிவுரையாளர் தம்மர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்தவுடன் அரசாங்கம் முறையான திட்டங்களை வகுத்து வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைத்து அங்கு வாழ்ந்த மக்களுக்கு வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேலும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு குற்றங்கள் இழைக்கப்பட்டதாக கண்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடு வழங்கவும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

இலங்கை அரசு முறையாக செயற்படாததே ஜெனீவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வருவதற்கு காரணமாக அமைந்து விட்டது.

இந்த பிரேரணை நிறைவேறினால் இலங்கை பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பாதிக்கப்படுவது இந்நாட்டு மக்களே என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## இந்திய பிரஜைகள் மூவர் கைது

சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த இந்திய பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு பிரதேசத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா, பம்பேமடுவ பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்து ஆடை விற்பனையில் ஈடுபட்ட மேலும் ஒரு இந்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் மட்டக்களப்பு மற்றும் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

## சிகரெட்டுக்களை கடத்தியவர் கைது

டுபாயிலிருந்து சட்டவிரோதமான முறையில் சிகரெட்டுக்களை எடுத்துவந்த நபர் ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த 35 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நபரிடமிருந்து எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நபர் நேற்று காலை 6 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். (அ-2)

## அகதிகளின் வருகை குறைவடைந்துள்ளது

### ஆஸி. பிரதமர் தெரிவிப்பு

(சிட்னி)

இலங்கை அகதிகளின் வருகை கணிசமான அளவு குறைவடைந்திருப்பதாக அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா அரசாங்கம் படகு மூலம் வருபவர்களில் தங்களது வழக்குகள் யாவும் தோல்வி அடைந்தவர்களையும் அவுஸ்திரேலியா சட்டத்தை மீறி செயற்பட்டவர்களையும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கணிக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களையும் அவர்களின் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 50 நாட்களில் அகதிகளுடன் எந்த ஒரு படகும் அவுஸ்திரேலியா நோக்கி பயணிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தமது அரசாங்கம் அமுலாக்கியுள்ள புதிய அகதிக் கொள்கைக்கு கிடைதத வெற்றி எனத் தெரிவித்தார. (அ-2)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக் கவிழ்ப்புதான் அமெரிக்காவின் இலக்கா?

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய, ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், இலங்கைப் பயணத்தின் முடிவில் வெளியிட்ட கருத்து அரசாங்கத்துக்குப் பெரும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய அவரது குற்றச்சாட்டுக்கள் மட்டும் அரசாங்கத்தின் சினத்துக்குக் காரணமல்ல, அதற்கும் அப்பால், மனித உரிமைகளுக்கான மதிப்பு மோசமடைந்து வருகின்றமை, மதச் சிறுபான்மையினருக்கு எதிரான தொடர் தாக்குதல், சட்டத்தின் ஆட்சி சீர்கெட்டு- ஊழல்களும் சட்டத்தின் பிடியில் குற்றவாளிகள் சிக்காத தன்மையும் ஜனநாயக பாரம்பரியத்தின் பெருமையை சீரழிக்கிறது என்று அவர் வெளியிட்ட கருத்து அரசாங்கத்தை பெரிதும் யோசிக்க வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதாவது, போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள், மீறல்களை மட்டும் வைத்துக்கொண்டு, இலங்கைக்கு அமெரிக்கா நெருக்கடி



கொடுக்கவில்லை. போருக்குப் பின்னரும் இலங்கையின் நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று சுட்டிக்காட்டியிருந்தார் நிஷா தேசாய் பிஸ்வால். சர்வதேச சமூகம் பொறுமையிழந்து வருவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஜெனிவாவில் அமெரிக்கா மேற்கொள்ளும் நகர்வுகள் குறித்து இப்போது அரசாங்கத்துக்கு இரண்டு அச்சங்கள் தோன்றியுள்ளன.

முதலாவது, கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முந்திய போரின் போது நடந்த சம்பவங்கள், மீறல்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா காட்டும் உறுதி.

இரண்டாவது, இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா இறங்கப் போகிறதா என்ற கலக்கம்.

இதுவரைக்கும், தம்மை மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல மேற்கு நாடுகள் முனைவதாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறிவந்தார். அது போலவே அமைச்சர்களும், சர்வதேச நீதிமன்றத்துக்கு அரசாங்கத் தையும் படையினரையும் இழுக்க முயற்சிகள் நடப்பதாகக் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இப்போது, இலங்கையை அடிமைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அரசாங்கம் புலம்பத் தொடங்கியுள்ளதைக் காணமுடிகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் சுதந்திரதின உரையில் இலங்கை மக்கள் பெற்ற சுதந்திரத்தை எவரும் அபகரித்துக் கொள்வதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

அதுமட்டுமல்லாமல், மக்களை காப்பாற்றுவதற்கு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு என்று கூறித்தான் பிற நாடுகளின் மீது அவர்கள் கை வைப்பார்கள் என்றும் அமெரிக்காவைச் சாட்டியிருக்கிறார்.

இப்போது அரசாங்கத்துக்கு போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்தோ, அது சார்ந்த விசாரணைகள் குறித்தோ அதிகம் பயம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு அடுத்த கட்டமாக அமெரிக்கா ஆட்சிக்கவிழ்ப்புக்கான சூழ்லை உருவாக்கி விடுமோ என்ற கலக்கம்தான் அதிகரித்து வருகிறது.

போர்க்குற்றச்சாட்டுக்கள் மீது சர்வதேச விசாரணை நடத்துவதில் அமெரிக்கா அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்பது உறுதி. நிஷா தேசாய் பிஸ்வால் கொழும்பில் இதனை தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தார்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்நாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே, அமெரிக்கா வலியுறுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு அப்பால், சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்க முனைவதில் உள்ள சிக்கல்களை அமெரிக்கா நன்றாகவே புரிந்து வைத்திருப்பதால் அத்தகைய சிக்கலுக்குள் நுழைய அமெரிக்கா விரும்பவில்லை.



அதற்காக, எந்த விசாரணைப் பொறிமுறைக்கும் இணங்க மறுக்கும் இலங்கை அரசாங்கத்தை இப்படியே விட்டுவைக்கவும் அமெரிக்கா தயாராக இல்லை. இலங்கை அரசாங்கத்தின் மூலம், உள்ளக விசாரணை நடத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு எப்போதோ போய்விட்டது.

அந்த நம்பிக்கை இழக்கப்பட்டு விட்டதென்பதை நிஷா தேசாய் பிஸ்வாலும் கூட கொழும்பில் உறுதிப் படுத்தியிருந்தார்.

இந்த நிலையில்,ஜெனிவாவில் கொண்டுவரப் போகும் தீர்மானத்தின் மூலம் இலங்கையை வழிக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. அதேவேளை, இலங்கை மீது சர்வதேச விசாரணை, பொருளாதார தடை என்று கடும்போக்கில் இறங்குவதிலும் அவ்வளவு விருப்பம் இருப்பதாகவும் தோன்றவில்லை.

ஏனென்றால் அவை அரசாங்கத்தைப் பலப்படுத்துவதாக அமைந்துவிடும் என்று அமெரிக்கா கருதுவதாகத் தெரிகிறது.

அரசாங்கமும் கூட, இந்த ஜெனிவா தீர்மான நகர்வை தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கே பயன்படுத்தப் பார்க்கிறது. இத்தகைய நிலையில், அரசாங்கத்தின் திட்டத்துக்கு சாதகமான வகையில்- அதற்குத் துணை போகின்ற வகையில் காய்களை நகர்த்த அமெரிக்கா பின்நிற்கலாம்.

இந்த அரசாங்கத்தின் மூலம் தமது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்ற முடிவுக்கு வருமேயானால், அமெரிக்காவுக்கு உள்ள ஒரே தெரிவு, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமேயாகும்.

அத்தகைய மாற்றத்தின் மூலம், தமது நிகழ்ச்சி நிரலை ஒழுங்காக நிறைவேற்ற முடியும் என்று அமெரிக்கா கருதக் கூடும். அண்மைக் காலத்தில் அமெரிக்கா போர்க்குற்றங்கள், பொறுப்புக்கூறல் குறித்து வலியுறுத்துவதை விட, ஜனநாயகம், நீதி, ஊடக சுதந்திரம், ஊழல், சட்டத்தின் ஆட்சி பற்றியெல்லாம் அதிகம் பேசுவதைக் காணலாம்.

இவை போர்க்கால மீறல்களுடன் தொடர்புபட்டவையல்ல. முற்றுமுழுதாக மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய விடயங்களும் அல்ல. இதுதான், ஆட்சி மாற்றத்தை நோக்கி அமெரிக்கா காய்நகர்த்தல்களை செய்ய முனைகிறதா என்ற சந்தேகம் எழும்பக் காரணம்.

அரசியல் சட்டத்தின் மூலம், தமது ஆட்சியை வரையறைகளுக்கு அப்பாற்பட்டதாக விரிவுபடுத்திக் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை வழிக்குக் கொண்டு வருவதற்கு அமெரிக்காவுக்கு இப்போது மாற்று வியூகங்கள் கிடையாது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, அதன்மூலம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் விவகாரங்களை கையாள அது முற்படலாம்.

அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் போர்க்குற்றங்களுக்கு அப்பால் பேசத் தொடங்கியதும், நாட்டை அடிமைப் படுத்த மேற்கு நாடுகள் முனைவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறியுள்ளதும் இந்த சந்தேகத்துக்கு வலுச் சேர்க்கிறது.

போருக்குப் பிந்திய சம்பவங்களை முன்னிறுத்தி இலங்கைக்கு எதிராக அமெரிக்கா காய்களை நகர்த்தத் தொடங்கினால், அது அரசாங்கத்துக்கு மிகப்பெரிய சிக்கலாக அமையும். அத்தகையதொரு நிலை உருவாவதை அரசாங்கமும் விரும்பாது.

எவ்வாறாயினும், அமெரிக்காவின் தற்போதைய நகர்வுகள் அரசாங்கத்துக்கு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டுள்ளதுபோலவே தெரிகிறது.

அமெரிக்காவின் இலக்கு எது என்பதை தெளிவாக உறுதி செய்து கொண்டால்தான் ஜெனிவாவில் தகுந்த உபாயத்தை அரசாங்கத்தினால் வகுக்க முடியும்.

போர்க்கால குற்றங்களா, போருக்குப் பிந்திய மீறல்களா ஜெனிவாவில் முக்கியம் பெறப் போகிறது என்பதன் அடிப்படையில் தான், அரசாங்கம் மீதான அழுத்தத்தின் கனதி எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை உறுதி செய்துகொள்ள முடியும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையை கனடா வலியுறுத்தும்?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பிரித்தானிய மற்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக் மற்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் ஆகியோர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பங்கேற்று இலங்கை விவகாரம் குறித்து பேசுவார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

அமர்வுகளின் ஆரம்பத்தில் பொதுச் செயலாளர் பான் கீ மூன் உரையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி அமர்வுகள் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆரம்ப தினத்திலேயே கனேடிய, பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர்களும் இலங்கை குறித்த கருத்து வெளியட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஆதரவு தீர்மானம் குறித்து பிரித்தானிய பிரதமரின் உரையில் குறிப்பிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கனேடிய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் அடிப்படையில் அறிக்கை ஒன்றை வெளியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட உள்ள தீர்மானத்திற்கு எதிராக சில நாடுகளின் ஆதரவு திரட்டப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-2)

## யுவதிகளிடையே மோதல்; ஒருவர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

துன்னாலை குடவத்தைப் பகுதியில் இரு யுவதிகளுக்கிடையே இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்த நிலையில் யுவதியொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. துன்னாலை குடவத்தைப் பகுதியில் இரு குடும்பங்களிற்கிடையே ஏற்பட்ட தகராறு பின்னர் இரு யுவதிகளின் மோதலில் நிறைவுக்கு வந்துள்ளது.

இதில் படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு மற்றைய யுவதி நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-9-60)

## கோரிக்கைகளை சமர்ப்பியுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சுகாதாரம், கல்வி, கூட்டுறவு, மின்சாரம், விவசாயம், நீர்ப்பாசனம், வாழ்வாதாரம், நீர் விநியோகம், வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி, போக்குவரத்து, கமநல சேவைகள், மீன்பிடி, வீடமைப்பு ஆகிய விடயங்கள் குறித்து துறைசார்ந்த பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களுடைய கோரிக்கைகளை தமது அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விரைவாக அறிவிக்குமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் பி.என்.சுதர்சன் கேட்டுள்ளார். (அ)

## மஹோற்சவம்

புன்னாலைக்கட்டுவன் கோண்டாவில் கிழக்கு பொற்பதிவீதி பழைய காளி கோவில் என விளங்கும் திருவருள் மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகிறது.

இத்திருவிழா காலங்களில் எதிர்வரும் 12 ஆம் திக்தி புதன்கிழமை வெட்டைத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (அ-2-78)

## பட்டாசு தொழிற்சாலையில் வெடிப்பு; இருவர் மரணம்!

பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் கடும் தீக்காயங்களுடன் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்ட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்துச் சம்பவம் நீர்கொழும்பு, கிம்புலா பிட்டிய பத்தாயம் வத்தை பிரதேசத்தில் உள்ள பட்டாசுதொழிற்சாலையில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் பட்டாசு தொழிற்சாலை ஊழியர்களே மரணமடைந்தும் படுகாயமடைந்தும் உள்ளவர்களாவர். பட்டாசு வெடிமருந்துக்களை கலக்கும் போது ஏற்பட்ட இடைத் தாக்கத்தின் போது திடீரென்று பெரும் சத்தத்துடன் வெடித்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சூரியா மற்றும் முஹா என்ற பெயர்களைக் கொண்ட பட்டாசு வகைகள் இங்கு தயாரிக்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

## இலவச பண்ணிசை வகுப்புக்கள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச பண்ணிசை புதிய பிரிவிற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

எனவே இப்பயிற்சி நெறியில் கல ந்து கொள்ள விரும்புவோர் மேற்குறிப்பிட்ட முகவரியில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெயர்க ளைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)


## மகனை காணவில்லை; தந்தை முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு சென்ற மகனைக் காணவில்லையென தந்தையினால் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். சுண்டுக்குளியைச் சேர்ந்த சண்முகராஜன் சுரேசன் (வயது 36) என்பவர் கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த 5 ஆம் திகதி தந்தைக்கு தொலைபேசி எடுத்து கலந்துரையாடியதாகவும் ஆனால் அதற்குப் பின்பு அவர் எங்கு சென்றார் என்பது தெரியவில்லையென அவரது தந்தையினால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவில் கல்வி பயிலும் இரண்டாம் வருட மாணவிக்கு கணனி வழங்கப்பட்டது. கணனியை வர்த்தகர் சி.சச்சிதானந்த ஐயர் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## பொலிஸ் கோடீஸ்வரர்களை தேடி நடக்கிறது விசாரணை

பொலிஸ் திணைக்களத்தின் கோடீஸ்வரர்களை தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் திணைக்களத்தில் இணைந்து கொண்டு குறுகிய காலத்தில் கோடீஸ்வரர்களாக மாறிய நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

வருமானத்தை விடவும் அதிகளவில் சொத்துக்கள் எவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளன என்பது குறித்தே விசாரணை நடத்தப்பட உள்ளது.

பொலிஸ் பரிசோதகர்கள், சிரேஸ்ட பொலிஸ்பரிசோதகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்டவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பாரிய சொகுசு வீடுகள், ஹைபைரைட் ரக வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆடம்பர வசதிகளுடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புறக்கோட்டை, கோட்டை, மாளிகாவத்தை உள்ளிட்ட கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடமையாற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள் பாரிய சொத்துக்களை குவித்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

## மேல்மாகாண அமைச்சராக நியமனம் பெறுவார் ஹிருணிகா?

(கொழும்பு)

மேல் மாகாணசபை தேர்தலின் பின்னர் ஹிருணிகா பிரேமசந்திரவை மாகாண அமைச்சராக நியமிக்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆலோசனை மேற்கொண்டு வருகிறது

அரசாங்க கட்சி அமைச்சர்கள் மத்தியில் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் அவர் ஏற்கனவே கட்சியின் இணை அமைப்பாளராக செயற்படுகிறார்.

இந் நிலையில் அவரின் திறமைகளை கருத்திற்கொண்டு மாகாண அமைச்சை அவருக்கு வழங்கலாம் என்று அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, மைத்திரிபால, சாலிந்த திஸாநாயக்க ஆகியோர் இந்தக் கூட்டத்தின் போது குறிப்பிட்டனர்.

இதேவேளை மேல் மாகாண சபை தேர்தலில் ஹிருணிக்காவின் வெற்றிக்காக அனைத்து அமைச்சர்களும் தமது ஆதரவை தரவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இலங்கை மீனவர்களை கைது செய்வதை நிறுத்துங்கள்

### அமைச்சர் வீ. நாராயணசாமி

(சென்னை)

இலங்கை இந்திய மீனவர்களின் பேச்சுவார்த்தைக்கு இடமளிக்கும் வகையில் இலங்கை மீனவர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு, இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்திய பிரதம மந்திரி அலுவலக அமைச்சர் வீ. நாராயணசாமி இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

இந்திய மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிட்டால் எதிர்வரும் இரண்டு நாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தையில் உரிய தீர்வை எதிர்ப்பார்க்க முடியாது என்றும் நாராயணசாமி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து 80 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

## விசா பட்டியலில் இருந்து இலங்கையை நீக்கியது ஏன்?

### கேள்வியெழுப்புகின்றது அரசாங்கம்

இந்தியாவின் வருகைக்கு பின் விசா வழங்கும் பட்டியலில் இடம்பெறாமை குறித்து இலங்கை தமது கவலையை வெளியிட்டுள்ளது.


இலங்கையின் வெளியுறவு அமைச்சு இது தொடர்பில் இந்தியாவிடம் விளக்கம் கோரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் விளக்கம் கோரவுள்ளதாக வெளியுறவு அமைச்சின் பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் றொட்னி பெரேரா தெரிவித்துள்ளார். இந்த பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டமைக்கான காரணத்தை இந்திய அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. இலங்கையுடன் பாகிஸ்தான், சூடான், ஆப்கானிஸ்தான், ஈராக் , ஈரான் போன்ற நாடுகளுக்கும் இந்தியாவின் வருகைக்கு பின்னர் விசா வசதி பட்டியலில் இடம் வழங்கப்படவில்லை. பாதுகாப்பு காரணங்களை மையமா கக் கொண்டே இந்த வருகைக்கு பின் விசா வசதி பட்டியலில் இருந்து சில நாடுகள் நீக்கப்பட்டதாக இந்திய அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. எனினும் இலங்கை குறித்த பாதுகாப்பு அச்சம் குறித்து அந்த தரப்பு உரிய தகவல்களை தரவில்லை.

இதேவேளை இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இலங்கைக்கு வந்தபின்னர் இந்தியர்களுக்கு வழங்கப்படும் விசா வசதிகளை நீக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நரேந்திர மோடி பிரதமரானால் தமிழர்களின் பிரச்சினை தீரும்



(சென்னை)

நரேந்திர மோடி பிரதமரானால் இலங்கைத் தமிழர் பிரச்சினை, மீனவர்கள் மீதான தாக்குதல், மின்பற்றாக்குறை உள்ளிட்ட தமிழர்களின் அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிடும் என்று பா.ஜ.க. மாநிலத்தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னை வண்டலூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஏனைய மாநிலங்களை விட தமிழகத்தில்மோடிக்கு மிகப் பெரிய ஆதரவு இருக்கிறது. தமிழகத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான கிராமங்களில் வீடுதோறும் மோடி உள்ளம் தோறும் தாமரை என்ற பிரசார இயக்கத்தை நடத்தினோம். இதற்கு மிகப் பெரிய வரவேற்பு இருந்தது.

மோடி பிரதமரானால் இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழக மீனவர் பிரச்சினை, நதிநர் பிரச்சினை, மின்பற்றாக்குறை என அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும். குஜராத்தைப் போல மது இல்லாத தமிழகம் உருவாகும். மோடியை பிரதமராக்க தமிழக மக்கள் தயாராகிவிட்டனர் என்றார். (2)



லிபியா நாட்டின் டிரிபோலி மற்றும் பெங்காசி நகர்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு இடைக்கால பாராளுமன்றம் காலாவதியானதை தொடர்ந்து அதனை நீட்டிப்பு செய்யக் கூடாது என வலியுறுத்தி சிவப்பு அட்டைகளை ஏந்தி பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

## தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 2 பேர் பலியாயினர், 6 பேர் காயமடைந்தனர்.

ரஷ்யாவில் சக்ஹாலின் தீவில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்குள் ஒரு மர்ம நபர் புகுந்தான். பின்னர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் அங்கிருந்தவர்களை சுட்டான். அதில், ஒரு கன்னியாஸ்திரியும், தேவாலய ஊழியர் ஒருவரும் என 2 பேர் பலியாகினர். 6 பேர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து அறிந்த பொலிசார்விரைந்து சென்று துப்பாக்கியால் சுட்ட மர்ம நபரை கைது செய் தனர்.

ஒரு தனியார் பாதுகாப்புத் துறை நிறுவனத்தில் பணிபுரியும் அவன் எதற்காக துப்பாக்கியால் சுட்டான் என்று தெரியவில்லை. (2)

## முயல் சிற்பத்தை நீக்க உத்தரவு

(ஜோகன்னஸ்பர்க்)

மறைந்த தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் வெண்கல சிலையின காதுக்குள், அனுமதிபெறாமல் வடிவமைத்த, முயல் சிற்பத்தை நீக்குமாறு, அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

இவர் தனது 95ஆவது வயதில் காலமானார். மண்டேலாவுக்கு, அந்நாட்டு அரசு, 30 அடி உயர வெண்கல சிலையை, அமைத்துள்ளது. மணடேலாவின் இறுதி சடங்கு முடிந்த, மறு நாள், இந்தச்சிலை திறக்கப்பட்டது.

இந்நிலையில், மண்டேலாவின் சிலையை வடித்த சிற்பிகள், சிறிய முயல் சிறபததை, சிலையின் காதில் வடிவமைத்திருந்தனர். இந்த முயல், தலைவரது சிலைக்கு அவமான சின்னமாகவுள்ளதாக, அந்நாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதையடுத்து, சிலையின் காதிற்குள் மறைவாக செதுக்கப்பட்ட, முயல் சிற்பத்தை நீக்கும்படி, சிலை அமைத்த நிறுவனத்திற்கு அரசு உத்தர விட்டுள்ளது. (2)

# மோடியின் பேச்சு மக்களை வசீகரித்தது

*(சென்னை)*

***இந்தியில் நீங்கள் உரையாற்றும் நிமிடங்களில் அம்மொழியைப் புரிந்து கொள்ளாதவர்களைக் கூட நீங்கள் எழுப்பும் உணர்ச்சி மிக்க குரல், அதன் தொனி, உங்களுடைய கரங்களும் முகமும் வெளிப்படுத்தும் பாவனை மக்களை வசீகரித்தது. நீங்கள் ஆற்றிய உரை, உன்னதமான சொற்பொழிவாகும் என்று வைகோ புகழாரம் சூட்டினார். அதற்கு மோடி, மிகச் சிறந்த பேச்சாளரான நீங்களே பாராட்டுவது மகிழ்ச்சியளிக்கிறது என்று கூறினார்.***

### வைகோ புகழாரம்



பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி சென்னை வண்டலூரில் நடந்த கூட்டத்தை முடித்துக் கொண்டு இரவு ஹோட்டலில் தங்கினார்.

அங்கு அவரை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ சந்தித்து பேசினார். மோடிக்கு அவர் பொன்னாடை அணிவித்து கட்டித் தழுவிக் கொண்டார். பின்னர், இருவருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அப்போது, பொதுக் கூட்டத்தில் மோடி பேசியதை வைகோ வெகுவாக புகழ்ந்தார். அவர்களது உரையாடல் குறித்து ம.தி.மு.க. வெளியிட்டுள்ள செய்திக குறிப்பில் கூறியிருப்பதாவது,


தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லப்படுவதையும், அதைத் தடுக்காத மத்திய அரசின் கையாலாகாத தன்மையைப் பற்றிச் சாடியதும், நதிகள் இணைப்பின் அவசியத்தை வலியுறுத்தியதும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பங்கேற்ற கட்சிகள் ஊழல் செய்து அதனால் பலன் பெற்றதைப் பற்றியும் நீங்கள் கூறியதோடு, தன்னை மேதையாகக் கருதிக் கொள்ளும் மறு வாக்கு எண்ணிக்கை அமைச்சர் ப.சிதம்பரத்தை கிண்டல் செய்த முறையும் பேச்சின் சிறப்பான முத்திரைகள் என்றார் வைகோ.

நாடெங்கும் மோடி அலை வீசுகிறது. தமிழ்நாட்டு அரசியல் களத்தில் தி.மு.க., - அ.தி.மு.க. என்று இதுவரை இருந்த பரிமாணம் மோடி அலையால் இம்முறை உடையும். புதிய மாற்றம் தொடங்கும் என்றார். அதற்கு மோடி நானும் அப்படித்தான் எதிர்பார்க்கிறேன் என்றார்.

இலட்சக் கணக்கான ஈழத் தமிழர்கள் இலங்கை அரசால், படுகொலை செய்யப்பட்டதறகு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் துரோகமும் காரணம் என்று கூறிய வைகோ, வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் கடைப்பிடித்த அணுகுமுறையையே நீங்கள் அமைக்கப் போகிற அரசும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு அப்படியே செய்வோம் என்று மோடி கூறினார். (2)

## பேருந்து-லொறி மோதி தீப்பற்றியது

### 18 பேர் பலி



(பியூனஸ்)

ஆர்ஜென்டினாவில் பேருந்து மீது லொறி மோதி வெடித்து தீப்பற்றியதில் 18 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 15 பேரபலத்த காயமடைந்தனர்.

ஆர்ஜென்டினாவின் மெண்டோஸா மாகாணத்தில் பியூனஸ் அயர்ஸயும், சாண்டியாகோவையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் நேற்றுமுன்தினம் இவ்விபத்து நிகழ்ந்தது.

எதிர் திசையில் வழி மாறி வந்த லொறி, பேருந்து மீது மோதியது. மோதிய வேகத்தில் இரு வாகனங்களும் வெடித்து தீப்பற்றின. இதில், லொறி மற்றும் பேருந்து ஓட்டுநர்கள் உட்பட 18 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

தகவலறிந்த தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பலத்த காயமடைந்த 15 பேரை தீயணைப்புப் படையினர் மீட்டனர். (2)

## அட்லாண்டிக் கடற்பகுதிக்கு ஈரான் போர்க்கப்பல் விரைவு



(டெஹ்ரான்)

அமெரிக்க கடல் எல்லைக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள அட்லாண்டிக் கடற்பகுதிக்கு ஈரான் தனது போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளது.

இதுதொடர்பாக ஈரானின் வடக்கு பிராந்திய கடற்படை கமாண்டர் அஃப்சின் ரிஜாயி ஹடாட்டை மேற்கோள்காட்டி, ஐ.ஆர்.என்.ஏ நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது,

அட்லாண்டிக் கடற்பகுதிக்கு ஈரான் நாடு தனது போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளது. தென்னாபிரிக்கா அருகே உள்ள கடல்பகுதி வழியாக அந்தக் கப்பல்கள் சென்று கொண்டிருக்கின்றன. அமெரிக்க கடல் எல்லைப் பகுதி அருகாமையில், ஈரானின் போர்க் கப்பல்கள் செல்வது இதுவே முதல்முறையாகும். ஈரான் கடற்பகுதி அருகே அமெரிக்க போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதற்கு பதிலாக தனது போர்க் கப்பல்களை ஈரான் அனுப்பியிருப்பதாக கூறப்படுகிறது. (2)

## சிரியாவில் உணவு விநியோகத்தில் ஈடுபட்ட ஐ.நா.ஊழியர்கள் மீது துப்பாக்கிச்சூடு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் உணவு பொருட்கள் எடுத்துச் சென்ற ஐ.நா. ஊழியர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.

சிரியாவின் பெரிய நகரங்களில் ஒன்றான ஹோம்ஸ் மக்கள் ஆதரவு பெற்ற புரட்சி படையின் வசம் உள்ளது. அதை மீட்க அங்கு இராணுவம்தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. 25 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இருந்தும் கலவரம் ஓய்ந்து அமைதி திரும்பவில்லை.

அங்கு கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் தினசரி குண்டு வீச்சு நடைபெறுகிறது. இங்கு மட்டும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். குண்டு வீச்சில் கட்டடங்கள் சேதம் அடைந்துள்ளன. அவற்றின் இடிபாடுகளில்தான் மக்கள் வாழ்கின்றனர்.

உணவு- மற்றும் மருந்து பொருட்கள் கிடைக்காததால் மக்கள் தவிக்கின்றனர். எனவே அங்குள்ள மக்களுக்கு உதவ ஐ.நா.சபை 3 நாட்கள் போர் நிறுத்த ஒப்பந்த நடவடிக்கை மேற்கொண்டது.

அதன்படி இராணுவமும், புரட்சி படையும் தங்கள் சண்டையை நிறுத்தி இருந்தனர். இந் நிலையில் அங்கு ஐ.நா. ஊழியர்கள் 'சிரியா ரெட் கிரசண்ட்' என்ற சமூக சேவை அமைப்புகள் இணைந்து முதல் நாளன்று அங்கு சிக்கி தவித்த 80 பேரை மீட்டது. மேலும் உணவு மற்றும் மருந்து பொருட்களை வழங்கியது.

ஆனால் 2ஆவது நாளாக நேற்றுமுன்தினம் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டது. பொது மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்க சென்ற ஐ.நா. ஊழியர்களின் வாகனங்களை சுற்றி வளைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. கையெறி குண்டுகளும் வீசப்பட்டன.

அதில் கார் சாரதி ஒருவர் காயம் அடைந்தார். இச் சம்பவம் பல மணி நேரம் நீடித்தது. ஒருபுறம் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் பொதுமக்களுக்கு 250 உணவு பொட்டலங்களும் 90 மருந்து பார்சல்களும் வழங்கப்பட்டன.

இதற்கிடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியது யார்? என்பதில் இராணுவம் மற்றும் புரட்சிபடையினருக்கு இடையே சர்ச்சை எழுந்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருப்பதியில் தரிசனம் பெற்றார் சிராந்தி



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷ திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டதாக தேவஸ்தான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிராந்தி ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு திருமலைகக்கு சென்றார்.

திருமலையில் ஸ்ரீ கிருஷ்ணா விருந்தினர் மாளிகையில் தங்கிய அவர், 5 மணிக்கு திருமலையில் உள்ள ஆந்திர மாநில கைவினை பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை மையமான லேப்பாக்சிக்கு சென்று இந்திய கலாசார உடையான புடைவைகள் உள்ளிட்ட பொருட்களை வாங்கினார். இதனால, அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவர் கடைக்குள் இருக்கும் வரை வேறு வாடிக்கையாளர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. அவர் தங்கியுள்ள விருந்தினர் மாளிகைக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சிராந்தி நேற்று அதிகாலை நடைபெற்ற சுப்ரபாத சேவையில் தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகளை தேவஸ்தான அதிகாரிகள் செய்துள்ளனர். இவருடன் 33 பேர் வந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

# மனித உரிமை சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்

இலங்கை மனித உரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவினால் சில சட்டத் திருத்தங்கள செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான உத்தேச வரைவுத் திட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தேச திருத்தச் சட்ட வரைவு ஆவணம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தற்போது இந்த ஆவணம், அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார். மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு மனித உரிமை ஆணைக்குழுவிற்கு போதியளவு அதிகாரங்கள் வழங்கப்பட வேணடுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் ஓர் விடயம் குறித்து தேசிய ரீதியான விசாரணைகள் நடத்தக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தேசிய மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. எவ்வாறெனினும், பாராளுமன்றில் இந்த உத்தேச சட்டம் எப்போது சமர்ப்பிக்கப்படும் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. (அ-2)

# மாடு வெட்டுவதை நிறுத்தக்கோரி சிங்களராவய நேற்று ஆர்ப்பாட்டம்



மாடு வெட்டுவதை உடன் நிறுத்துமாறு கோரி சிங்கள ராவய இயக்கத்தினர் நேற்றுக்காலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னாலிருந்து கொழும்பு வரையான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ஆரம்பித்தனர்.

கடந்த வருடம் தலதா மாளிகையின் முன் உயிர்த்தியாகம் செய்த போவத்தே இந்திரரத்ன தேரர் தெரிவித்தபடி மாடு வெட்டுவதை நிறுத்துவதற்காக தாம் ஒரு சங்கம் அமைத்துள்ளதாகவும் அதில் 500பேர் அடங்கியுள்ளதாகவும் பேரணியில் ஈடுபட்ட சிங்கள ராவய அமைப்பினர் தெரிவித்தனர்.

மாடு வெட்டுவதை நிறுத்துவதற்காக இந்திரரத்ன தேரர் உயிர்த் தியாகம் செய்தார். அவர் வழியில் இன்னும் 499பேர் எஞ்சியுள்ளோம். இன்னும் ஒரு வார காலத்தினுள் மாடறுப்பு நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் இன்னும் பல உயிர்த்தியாகங்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இது விடயமாக எந்த ஒரு அடிப்படையிலும் தாம் பதில் அளிக்க தயார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் பிற மத தடை சட்ட மூலம் உடன் கொண்டுவரப்பட வேண்டும, இலங்கையிலுள்ள முஸ்லிம் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும், மாடறுப்பு உடன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோஷங்களை முன் வைத்தவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களது பேரணியை முன்னெடுத்தனர். (செ-1)


# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி தம்பிஐயா இராசம்மா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா இராசம்மா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பாலசிங்கம் கருணாகரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் கருணாகரன் நேற்று முன்தினம் சனிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி அந்தோனிப்பிள்ளை பிறக்சீற்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப் பிள்ளை பிறக்சீற் 5 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு Prince of Peace Parist 265, Alton Towers, Circle Scarborough ,ON M1V 4E7,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி விக்ரர் யோசப் மேரி செபஸ்ரியானா

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் இல.187,வேம்படி வீதி ,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விக்ரர் யோசப் மேரி செபஸ்ரியானா 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலிஇன்று பிற்பகல் 3மணிக்கு அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புகொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி டானியேல் தேவராசா


அல்வாய் வடமேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி டானியல் தேவராசா 3 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை 13 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு லண்டனில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### வேலுப்பிள்ளை பத்மநாதன்

கடவைப்புலம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் சூழானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பத்மநாதன் நேற்று முன்தினம் சனிக் கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கார்த்திகேசு யோகேஸ்வரன்

புங்குடுதீவு பெருங்காடு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 454, திருநகர் தெற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகேஸ்வரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கத்லீன் ஜெபமலர் முத்தையா

இலங்கை பெந்தெகோஸ்தே சபையில்ஊழியம்செய்துகொண்டிருந்த சகோதரி கத்லீன் ஜெபமலர் முத்தையா 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இலங்கை பெந்தெகோஸ்தே சபையில் நடைபெற்று பூதவுடல் கொட்டடியில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

# வடமராட்சி பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் இரவு மற்றும் பகல் வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதனால் மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் இரவு மற்றும் மாலை நேரங்களிலே இடம்பெற்று வருகின்றன.

இரவு வேளைகளில் கூரிய ஆயுதங்கள் பொல்லுகளோடு வீடுகளுக்குள் புகுகின்ற இனம் தெரியாதவர்கள் கதவுகளை தட்டி வீட்டிலிருப்பவர்களை அச்சுறுத்தி பணம், நகை, பொருட்கள் என்பனவற்றை சூறையாடிச் செல்கின்றனர்.

மாலை வேளைகளில் வீதியால் நகையணிந்து செல்லும் பெண்களை மோட்டார் சைக்கிள்களில் வரும் இனம்தெரியாதோர் நகைகளை அபகரித்துச் செல்கின்றனர்.

இவ்வாறாக வடமராட்சிப் பகுதியில் அதிகரித்துள்ள திருட்டுக்களை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# அமைச்சரின் சகோதரன் ஐ.தே.கட்சியில் இணைவு

அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் சகோதரரான ஆனந்த அளுத்கமகே ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனந்த கமகே முன்னாள் மத்திய மாகாண உறுப்பினராகவும் கங்கஹிலகோரளை பிரதேச சபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

சில அரசியல் முரண்பாடுகள் காரணமாக கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தலின் போது, அமைச்சருக்கும் ஆனந்த அளுத்கமகேவுக்கும் இடையில் பெரும் அரசியல் மோதல்கள் ஏற்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

இந்நிலையில், அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை சாட்சியங்களுடன் ஒப்புவிக்க தயாராக இருப்பதாக ஆனந்த அளுத்கம்கே தெரிவித்துள்ளார். (அ-2)

# கொட்டகலையில் தீ விபத்து; 15 ஏக்கர் நிலம் நாசம்

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் மானாபுல் தீ பற்றியுள்ளது. நேற்று பிற்பகல் தீ பரவியதன் காரணமாக இந்த பகுதியில் 15 ஏக்கர் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாராவது இப்பகுதிக்கு தீ வைத்திருக்க கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மலையகத்தில் தற்போது காணப்படும் அதிக வெயில் காரணமாக நீர் நிரம்பி காணப்படும் பல பகுதிகளில் கடந்த இரண்டு வாரகாலமாக இவ்வாறு தீ வைப்படுகிறது.

இதன் காரணமாக குடிநீருக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறு காடுகளுக்கு தீ வைப்பவர்களின் தகவல் கிடைத்தால் உடனடியாக அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் படி பொதுமக்களிடம் நுவரெலியா மாவட்ட செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியரசு பலவீனமாக இருப்பதால்தான் இந்தியாவை அயல் நாடுகள் மதிப்பதில்லை

## பா.ஜ.க.பிரதம வேட்பாளர் மோடி குற்றச்சாட்டு

தமிழக மீனவர்கள் இலங்கை சிறையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மீனவர்கள் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதில்மத்திய அரசுககு போதிய அக்கறையில்லை.

மீனவர்கள் பிரச்சினை தொடர்ந்து நீடிப்பதற்கு பலவீனமான மத்தியரசே காரணம். இதனால்தான் இந்தியாவின் கோரிக்கைகளுக்கு அயல் நாடுகள் செவிசாய்ப்பதில்லை என குஜராத் முதல்வரும் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளருமான நரேந்திரமோடி குற்றஞ்சாட்டியுள் ளார்.

சென்னை அருகே வண்டலூரில், பா.ஜ.க. சார்பில் நேற்று முன்தினம் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழக மீனவர்கள் இலங்கை சிறையிலும், குஜராத் மீனவர்கள் பாகிஸ்தான் சிறையிலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மத்திய அரசுக்கு போதிய அக்கறையில்லை. மீனவர்கள் பிரச்சினை தொடர்ந்து நீடிப்பதற்கு பலவீனமான மத்திய அரசே காரணம்.

மத்திய அரசு பலவீனமாக இருப்பதால்தான், இந்தியாவின் கோரிக்கைகளுக்கு அயல் நாடுகள் செவிசாய்ப்பதில்லை. இந்தியா மெத்தனமாக இருப்பதன் காரணமாக இலங்கை-பாகிஸ்தான்-வங்கதேசம்-நேபாளம்-மியான்மர் போன்ற நாடுகளில் இந்திய மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

மத்தியில் உள்ள அரசு வலுவான அரசாக இருந்தால், அயல் நாடுகளுடன் வலுவான உறவைப் பேணமுடியும். இலங்கை உட்பட்ட அயல் நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள அணுகுமுறையில் தளர்வு போக்கு உள்ளது.

இந்திய மீனவர்கள் தாக்கப்படுகின்ற விடயத்தில் இந்தியா கடுமையான நிலைப்பாட்டை கொண்டிருக்கவேண்டும்.

இந்த விடயத்தில் இந்தியாவின் தளர்வு போக்கு காரணமாகவே இந்திய மீனவர்கள் இன்னும் இலங்கையின் சிறைகளில் இருப்பதாக மோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை போன்ற சிறிய நாடுகளிடம் இருந்து இந்தியா அழுத்தங்களை எதிர்நோக்குவதற்கு இந்திய அரசாங்கத்தின் அணுகுமுறைகளே காரணம்.

இந்தியாவுக்கு பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா, இலங்கை என்று நான்கு பக்கங்களிலும் அழுத்தங்கள் உள்ளன.

இதனைக் களைந்து அயல் நாடுகள் இந்தியாவுடன் நட்பு நாடுகளாக இருக்க வழிசெய்யப்பட வேண்டும் என்று மோடி குறிப்பிட்டார். (அ-2)

## ஐ.தே.கட்சிக்கும் அரசிற்கும் இடையே வேறுபாடு இல்லை

### ரில்வின் சில்வா தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அரசாங்கத்திற்கும் இடையே வேறுபாடுகள் இல்லை என மகள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பாணந்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கை யில,

"ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிப்பதனால் எதிர்ப்பு வெளிப்படாது. ஏனெனில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் வேறுபாடு இல்லை.

எமது கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் யோசனையின் பிரகாரம் புதிய தலைவராக அநுரகுமார திஸாநாயக்கவை அனைவரது விருப்பத்துடன் தெரிவு செய்திருக்கின்றோம்.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சியினால் இதனை செய்யமுடியாது. ஏனெனில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்க விட்டுக்கொடுக்க மாட்டார்.

அதனை வேறுயாருக்கும் கொடுக்கவும் மாட்டார். மக்கள் விடுதலை முன்னணி தலைமைத்துவத்தை மாற்றி வழங்கிய முன்னுதாரணத்தை முடிந்தால் ஐக்கிய தேசியக்கட்சியால் செய்துகாட்டுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதனை அவர்களால் செய்யமுடியாது ஆகவே ஐக்கிய தேசியக்கட்சி பயனுள்ள கட்சி அல்ல என்றார். (2)

## தேர்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக பொலிஸார் செயற்படவேண்டும்

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தை மீறுவோர் தொடர்பில் ஒரே விதத்தில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலியில் வேட்பு மனு தாக்கல் தினத்தன்று வேட்பாளர் ஒருவரும் அவரின் ஆதரவாளர்கள் சிலரும் பொலிஸ் அதிகாரிகள்மீது தாக்குதல் மேற்கொள்வதற்கு முயற்சித்ததாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் சட்டம் மீறப்படுகின்றபோது பொலிஸார் நேரடி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புபடுபவர்களுக்கு எதிராக அரசியல் கட்சிகளும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவிக்கையில், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்காக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பொலிஸாருக்கே உள்ளதாக தெரிவித்தார்.

எனினும் இந்த அதிகாரம் மாத்திரம் தேர்தல் சட்ட மீறல்களை தடுப்பதற்கு போதுமானதாக அமையாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் தேர்தல் சட்டத்திற்கு மதிப்பளித்து ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலியில் இடம்பெற்ற சம்பவத்தின்போது குறித்த வேட்பாளர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அவரை கட்டாயமாக கைது செய்வதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்காக இரண்டு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன மேலும் கூறியுள்ளார். (2)


உங்களுக்குத்தேவையான காணிகள், வீடுகளை வாங்கவும் விற்கவும் முதன் முதலாக வட பகுதியில் உதயமாகியுள்ள ஒரே நிறுவனம்.

காணி// வீடு விற்பனைக்கு

கொக்குவிலில் 2 பரப்பு காணி சகல வசதிகளுடனும் கூடிய வீட்டுடன் (பயன்தரு மரங்களுடன் ) விற்பனைக்கு உண்டு. (A/001)

சங்கானை பிரதான வீதியில் 5 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. (A/002)

கோண்டாவில் (வடக்கு) இல் 9 பரப்பு 6.94 குளி காணி சகல வசதிகளுடன் கூடிய வீடு பயன்தரு மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. (A/003)

காணி// வீடு தேவை

நல்லூர், கந்தர்மடம், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் காணி/ வீடு விற்க விரும்புவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் (B/001)

சகல தொடர்புகளுக்கும்

நியல் எஸ்ரேற்

Real Estate

இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30, 1.30- 5.00 மணிவரை

வெள்ளிக்கிழமை விடுமுறை.

(கி-6356)

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 12 04 1953

ஆண்டவன் அடியில் 10 02 2006

அமரர் திரு:லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், அன்புக்கு இலக்கணமாய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குலவிளக்கே! எம் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய எம் அன்பு அப்பாவே! எங்கள் வாழ்வில் எத்தனை கோடி இன்பங்கள் இருந்தாலும் அது அத்தனையும் நீங்களாகுமா அப்பா! எட்டு ஆண்டுகள் என்ன எட்டாயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் பசுமையாக எம் மனதினில் எப்போதும் தெய்வமாக சுமந்து நிற்போம் அப்பா!!

எம் வாழ்வில் என்றும் உங்கள் துணை தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், சகோதரிகள், பேரப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் ஏறி இளைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எங்களுக்கான தீர்வில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோமா?

தோற்றவன் வெற்றி பெற வேண்டுமாயின் தோல்விக்கான காரணங்களை முதலில் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

அவ்வாறான ஆய்வுகள் இல்லையாயின் தோல்வி குறித்து கவலை கொள்ளலாமே தவிர அதில் இருந்து மீள முடியாது. அந்த வகையில் எங்கள் தமிழினத்தின் முப்பது வருட கால ஆயுதப் போராட்டம், அதற்கு முந்திய அகிம்சைப் போராட்டம் என்பவை தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

அவ்வாறான ஆய்வுகள் நடத்தப்பட்டால், தமிழினத்தின் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் இதுதானென்ற வரையறையோ, எல்லைப்பாடுகளோ இல்லாமல் இருப்பது ´மிகவும் வேதனைக்குரியது.

சந்தர்ப்ப சூழல்களுக்கு ஏற்ப இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிக் கதைப்பதைத் தவிர வேறு எதுவும் எங்களிடம் இல்லையெனலாம்.

அமெரிக்கத் தூதுவரிடம் ஒரு தீர்வு. பிரித்தானிய தூதுவரிடம் இன்னொரு தீர்வு. வெளிநாட்டு விஜயத்தின்போது அங்குள்ள புலம்பெயர் தமிழர்களை ஆசுவாசப்படுத்த அதற்கு ஒரு தீர்வு என்பதாக பேசுகின்றோமே தவிர, இதுதான் எங்கள் தீர்வுத் திட்டம் என்று அடித்துக் கூறி அச்சிடப்பட்ட தீர்வுத்திட்டப் புத்தகத்தைத் தூக்கிப் போடும் அளவில் எங்களிடம் எந்த ஏற்பாடும் கிடையாது.

இப்போது இந்தியாவுக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அங்கு நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், நாங்கள் தனிஈழம் கேட்கவில்லை. இந்திய மாநிலம் போன்ற அதிகாரங்களையே கேட்கின்றோம் எனக் கூறியுள்ளார்.

சம்பந்தர் இவ்வாறு கூறியதில் குறைகாண நாம் முன்வரவில்லை.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுகூடி இந்திய மாநில சுயாட்சி முறைமையே நமக்குத் தேவை என்று தீர்மானித்துக் கொண்டதா? என்பதே நமது கேள்வி.

இந்திய மாநில சுயாட்சி முறையிலான அதிகாரங்கள் நமக்குத் தேவை என அடிக்கடி வலியுறுத்தி வந்தவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

அவர் பல தடவைகள் இதுபற்றி பகிரங்கமாக கூறியுள்ளார். எனினும் ஆனந்தசங்கரி அவர்கள் இந்திய மாநில சுயாட்சி முறையிலான அதிகாரங்கள் நமக்குத் தேவை என வலியுறுத்திய போது அதனை ஆதரித்து குரல் கொடுப்பதற்கு இப்போது அதுபற்றிப் பேசுபவர்கள் முன்வரவில்லை. இதுதான் எங்கள் இனத்தின் சாபக்கேடு.

தீர்வாயினும் நான் தான் கூறவேண்டும் பிரச்சினை முடிப்பதாயினும் என்னால் தான் முடிக்கப்பட வேண்டும் என்ற நினைப்பு மற்றவர்களின் அர்த்தபுஷ்டியான கருத்துக்களை மறைத்துக் காட்டுகின்றது அல்லது அதற்கு இன்னொருவரால் உரிமை கோரப்படுகின்றது.

யார் யார் வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் காணும் அறிவின் பஞ்சமே இத்தகைய சிறுமைத்தனங்களுக்கு காரணமாகின்றன.

இந்தத் துன்பம் நீங்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு இதுதான் என்று அடித்துக் கூறவேண்டும். அதற்குத் தமிழ் அரசியல் தலைமைகள் தயாரில்லாத வரை, எங்கள் பிரச்சினைக்கான தீர்வுக் காலம் என்பது, மாலை மரியாதைகளுடனான விழாக்களாகவே கடந்து போகும்.

அட, வலி வடக்கில் மீளக்குடியமர வேண்டியவர்களின் விபரம் கூட இன்னமும் ஒரு தரப்பிடமும் உருப்படியாக இல்லையென்றால் மற்றைய விடயங்களைச் சொல்லவோ வேண்டும்?

# தமிழ்க்காங்கிரஸின் பணிகளை தமிழ் மக்கள் மறந்து விட்டனர்

## கஜேந்திரகுமார் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

ஜீ.ஜீ.பொன்னம்பலமும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் தமிழ்த்தேச வரலாற்றில் முக்கியமான கட்டத்தில் ஆற்றிய முக்கிய பணியை மக்கள் மறந்துவிட்டனர் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் ஜீ.ஜீ.பொன்னம பலத்தின் நினைவு தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை குருநகரில் உள்ள அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜீ.ஜீ.பொன்னம்பலமும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் தமிழ்தேச வரலாற்றில் முக்கியமான கட்டத்தில் ஆற்றிய முக்கிய பணியை மக்கள் மறந்துவிட்டனர். அதாவது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியானது பிரித்தானியாவிடமிருந்து இலங்கைத் தீவு சுதந்திரம் பெறமுன்பு ஸ்தாபிக்கப்பட்டது.இந்தக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் தமிழ் மக்களின் உரிமைகள் பிரித்தானியாவின் ஆட்சியிலிருந்து இலங்கை விலகும் போது முழுமையாக பேணப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே.

அதுமட்டுமின்றி 75 வீதம் சிங்களவர்களைக்கொண்ட இலங்கைத் தீவில் தமிழ்மக்கள் அவர்களின்முழுமையான தயவில் வாழ்வதாகயிருக்காமல் தனிததுவமான உரிமைகள் பேணப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதே அகில இலங்கைத தமிழ்க் காங்கிரஸ்.

இதேவேளை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்ததன் பின்பு ஆட்சி செய்வதற்காக இலங்கையில் சோல்பரி தலைமையில் ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு முதலாவது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்போது ஜீ.ஜீ.பொன்னம் பலத்தினாலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பிலும் வாக்கு மூலம் வழங்கப்பட்டது.

என்ன அடிப்படையில் அந்த வாக்கு மூலத்தை வழங்கியிருந்தனர் என்றால், 75 வீத பௌத்த சிங்கள மக்களைக் கொண்ட இலங்கைத்தீவில் .ஏனைய இன மக்கள் பெரும்பான்மையான சிங்கள மக்களின் தயவிலும் அவர்களின் அதிகாரத்திற்குள் சிக்குப்பட்டும் தவிக்க கூடாது அந்த அடிப்படையில் 50 இற்கு ஐம்பது கோரிக்கை முன்வைக்கப் பட்டது.அதாவது இலங்கைப் பாராளுமன்றத்தில் 50 வீதம் சிங்கள பௌத்த மக்களுக்கான ஆசனங்கள் ஒதுக்கப் படுகின்ற அதேவேளை மிகுதி 50 வீதம் ஏனைய தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழர்கள்,பறங்கியர் போன்ற எல்லா இனமக்களுககும் ஒதுக்கப்படவேண்டும.

அப்போதுதான் ஒருஇனம் தன்னிச்சையாக முடிவெடுத்து ஏனைய இன மக்களை பாதிக்ககூடிய வகையில் முடிவெடுப்பதை நாங்கள் தடுக்கலாம் என்ற கோட்பாட்டை முன்வைத்தனர்.

ஆனால் அன்றைக்கு அந்த நிலைப் பாட்டை முழுமையாக நிராகரித்து பிரித்தானியாவந்து இலங்கையின் முதலாவது அரசியல் அமைப்பை வழங்குவதற்கு முடிவெடுத்தது.

இந்நிலையில் இலங்கையின் முதலாவது அரசியல் அமைப்பான சோல்பரி மற்றும் 72, 77 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்புகளையும் தமிழ்மக்களின் எதிர்கால அரசியலை கருத்தில் கொண்டு ஏற்கவில்லை என உள்ளிட்ட பல விடயங்களை அவர் சுட்டிக் காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# உறவுகளை அச்சுறுத்தி மரணச்சான்றிதழ் வழங்கப்படுகிறது- த.தே.கூ. கடும் விசனம்

(கொழும்பு)

இலஙகையில் காணாமல் போனோர தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நடக்கும் இடங்களில்- அதே தினங்களில் வேறு குழுவினரால் மக்கள் அச்சுறுத்தப்பட்டு மரணச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகளும் நடந்துவருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் விசனம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் நடந்துவரும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு கவனத்தில் எடுக்காதுள்ளமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விமர்சித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஜனாதிபதி ஆணைக்குழு வாக்குமூலங்களைப் பதிவு செய்துகொண்டிருந்த சந்தர்ப்பங்களில், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட வேறுகுழுவினர் மக்களை நிர்ப்பந்தித்து மரணச் சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சில இடங்களில் மக்களுக்கு அவர்களின் உறவினர்கள் உயிரிழந்து விட்டனர் என்ற அடிப்படையில் நட்டஈடும் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரேமச்சந்திரன் கூறினார்.

ஜனாதிபதி ஆணைக்குழு காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை நடத்தி, காணாமல் போனவர்கள் உயிருடன் உள்ளனரா அல்லது உயிரிழந்துவிட்டார்களா போன்ற முழுமையான தகவல்களையும் திரட்ட முன்னரே, அரசாங்கம் மக்களுக்கு மரணச் சான்றிதழ்கள் கொடுக்கப்படுவதை ஏற்கமுடியாது என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு செய்கின்ற இந்த நடவடிக்கையை நிறுத்துவதற்காக மனித உரிமை அமைப்புகள் குரல்கொடுக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவிக்கையில்,

அப்படியாக மக்கள் அச்சுறுத்தப்பட்டதாகத் தகவல் இல்லை என்று கூறிய அவர், மக்கள் சுதந்திரமாக வந்து வாக்குமூலம் அளித்துச் சென்றதாகவும் கூறினார். (செ-2)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உண்மையான துறவு யாது?



ஒரு அன்பர் கேட்டார். எல்லாவற்றையும் துறந்தால்தான் ஞானம் வரும் என்று சொல்கின்றார்களே! என்றார். சரி துறந்துவிட்டால் எங்கே போவீர்கள் என்று கேட்டேன். பதில் இல்லை. இந்த உலகத்தின் மேல்தான் இருக்கப்போகின்றீர்கள்.

பசி எடுத்தால் என்ன செய்யப்போகிறீர்கள்? உணவைத்தானே நாடவேண்டும்? அப்படியென்றால் எதைத் துறந்ததாக அர்த்தம்? இருக்கின்ற இல்லத்தைவிட்டு இன்னொரு வீட்டுக்கோ விடுதிக்கோ சென்றால் என்ன மாற்றம்? இங்கு அதிகாரத்தோடு உணவு கேட்டதை விட்டு அங்கு பிறர் தயவை நாடிக்கையேந்தி வாங்கவேண்டியதுதானே தவிர வேறு என்ன விளையும்? துறவு என்றால் அது அன்று. அளவு முறை அறிந்து ஒழுகும் போது துறவு தானாக அமைந்துவிடும்.

சாப்பிட்டுக்கொண்டே இருக்கின்றீர்கள். உணவு சுவையாக இருக்கின்றது. ஆனால் உங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் இதுவரைக்கும்தான் உங்களால் ஜீரணிக்கச் செய்யமுடியும் என்று நன்றாகத் தெரிகிறது. அதைத் தெரிந்துகொண்டு இனிமேல் வேண்டாம் என்று சொல்லிவிட்டு அங்கேயே அதோடு நிறுத்தக்கூடிய அறிவும் செயலும் வந்துவிட்டன என்றால் அதாவது அறிந்த அறிவுக்கு செயல் ஒன்றுபட்டால் அதுதான் துறவு.

அடுப்பிலே சாதம் வைக்கின்றீர்கள் அல்லது சமையல் செய்கின்றீர்கள். வெந்து போன பின்பு ஏன் இறக்குகின்றீர்கள்? என்று கேட்டேன். சட்டியில் உள்ளது அடிப்பிடித்துவிடும். வேகவைக்கின்றவரை உறவு; இறக்குவது துறவு.

இதற்கு மேல் போனால் கெட்டுவிடும் எனத் தெரியும்போது உடனே விடுதலை செய்துவிடவேண்டும்.அளவோடு வைத்துக் கொள்ளவேண்டும். அளவு, அனுபவிக்கக்கூடிய முறை இந்த இரண்டும் தெரிந்தால் அதுதான் துறவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது டெஸ்ட் நியூசிடம் வீழ்ந்தது இந்தியா



இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதல் இனிங்சில் இந்தியாவை முழுமை ஆதிக்கத்துக்குள் வைத்து இருந்த நியூசிலாந்து அணி இரண்டாவது இனிங்சில் இந்திய அணியிடம் மாட்டிக் கொண்டது.

இருப்பினும் இந்திய அணியின் மோசமான முதலாவது இனிங்ஸ் துடுப்பாட்டம் நியூசிலாந்து அணிக்கு வெற்றியை தந்தது. இந்தியா அணி 407 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பாடியது.

இறுதியாக 366 ஓட்டங்களைப் பெற்று தோல்வியை சந்தித்தது. இதில் ஷிகார் தவான் 115 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இது அவருடைய இரண்டாவது சதமாகும். விராட் கோலி 67 ஓட்டங்களையும், டோனி 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நெய்ல் 'வக்னர் 4 விக்கெட்டுக்களையும், ரிம் சௌதி , ரென்ட் போல்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக நியூசிலாந்து அணி இரண்டாம் இனிங்சில் 105 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் ரொஸ் டெயிலர் 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் மொஹமட் சமி , இஷாந்த் ஷர்மா ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். சகீர் கான் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

நியூசிலாந்து அணி தனது முதலாவது இனிங்சில் 121.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 503 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணித்தலைவர் பிரன்டன் மக்கலம் 224 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இது இவரின் இரண்டாவது இரட்டைச் சதமாகும்.

கேன் வில்லியம்சன் 113 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். கூரே அன்டர்சன் 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இஷாந்த் ஷர்மா 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிக் கொண்டார். சகீர் கான் 2 விக்கெட்டுக்களையும், கைப்பற்றினார்.

இந்திய அணி தனது முதல் இனிங்சில் 202 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் ரோஹித் ஷர்மா 72 ஓட்டங்களையும், ரவீந்தர் ஜடேஜா ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக நெய்ல் வக்னர் 4 விக்கெட்டுக்களையும், ரிம் சௌதி , ரென்ட் போல்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நியூசிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் முதல் இனிங்சிலும், இரண்டாம் இனிங்சிலும் ஒரே மாதிரியாக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் நாயகனாக பிரன்டன் மக்கலம் தெரிவு செய்யப்பட்டார். 2 போட்டிகள் கொண்ட தொடரில் நியூசிலாந்து அணி 1:0 என முன்னிலை பெற்றுள்ளது.(க)





இடைககாடு மகாவிததியாலயததின வருடாநத இலலமெயவனமைப போடடி பாடசாலை மைதானததில அணமையில பாடசாலை அதிபர தலைமையில இடமபெறறது. இதனபோது விருநதினரகள மாலை அணிவிதது வரவேறகபபடுவதையும இடைவேளை நிகழவின ஒரு பகுதியையும வெறறியாளரகளுககு பதககஙகளும சானறிதழகளும வழஙகபபடுவதையும படங்களில் காணலாம். (க-23)

## ஜொலிஸ்ரார் வி.க.வை வென்றது கொக்குவில் கே.சி.சி.சி வி.கழகம்

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் அழைக்கப்பட்ட 4 அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் நேற்றுமுன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

முதல் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி (K.C.C.C) யாழ்ப்பாணம் ஜொலிஸரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்கொண்டது.

நாணயற் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி முதலில் களத்தடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இதன் படி முதலில் துடுப்பாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி (K.C.C.C) 9 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைக் பெற்றது.

இதில் உமாநாத் 75, ஆதித்தன் 41, ராகுலன் 24, ஜனுதாஸ் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரசன்னா 3, சைலேஷ்வரன், வாமனன், மதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 223 என்னும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பாடிய யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 165 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து போட்டியில் தோல்வியைத் தழுவியது.

இதில் மணிவண்ணன் 42, பிரசன்னா 33, சந்திரகுமார் 23, சஜீபன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜெயரூபன் 5, பவிதரன் மற்றும் ஜனுதாஸ் தலா 2, பிரதீஸ் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இப்போட்டியில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணி (K.C.C.C) 57 ஓட்டங்களால் யாழ்ப்பாணம் ஜொலிஸரார் விளையாட்டுக்கழக அணியை வென்றது. (க-23)



தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன. பெண்களுக்கான கபடிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக பெண்கள் அணி தென்மராட்சி பிரிவுகளிற்கிடையிலான கபடிப்போட்டியில் இரண்டாமிடத்தை சுவீகரித்துக் கொண்டது .அந்த அணியினை படத்தில் காணலாம். (க-23)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி முதல்வர் யோ. ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்விக்காருண்யன் இ.ச.பே.நாகரத்தினம், சிறப்பு விருந்தினராக கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர்க.றமேசநேசன், கௌரவ விருந்தினராக ச.துஸ்யந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

(பூநகரி)

கிளிநொச்சி ஞானிமடம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30க்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி த.கனகசபை தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் சு.தர்மஇரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் பொ.ஸ்ரீஸ்கந்தராசா, பூநகரி அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ப.கோகிலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-9-84)

## வல்வை வி.கழக பெரு விளையாட்டு; நேதாஜி வி.கழகம் சம்பியன்

வல்வை விளையாட்டுக்கழகத்தின் பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் வல்வை பொது விளையாட்டரங்கில் (Fudsal ground) நடைபெற்றன.

அரையிறுதிக்கு தகுதியான வல்வை ரெயின்போ விளையாட்டுக் கழகமும் வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

இரண்டாவதாக நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகமும் வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகமும் மோதியது.

இந்த ஆட்டத்தில் வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இறுதிப்போட்டியில் வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில்வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி, வல்வை விளையாட்டுக்கழகத்தின் பெருவிளையாட்டு 2014 ஆம் ஆண்டிற்கான கரப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டது. (க-23)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தின் விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பூந்தோட்டம் பொது மைதானத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வட மாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் விசேட விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலய பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜாவும் வட மாகாண ஆளுநரின் பிராந்திய இணைப்பாளர் எஸ்.எம். முகைதீனும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகரசபை செயலாளர் கே. சத்தியசீலன், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஜே. கேரத், மக்கள் வங்கியின் முகாமையாளர் கே. கோடீஸ்வரன்,சனச வங்கியின் பிரதிநிதி ஏ. நாகேந்திரன், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதி ஜி. சிவசேகரம்பிள்ளை, லயன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ஜே. கருணாகரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-9-266)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aayanaham.org

# நியூசிலாந்து அணிக்கெதிரான தோல்வி துரதிர்ஷ்டமானவற்றுள் ஒன்று


தோனி

இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ள நிலையில், இந்த போட்டியில் தோல்வி அடைந்தது குறித்து இந்திய அணியின் தலைவர் தோனி கூறியதாவது.


பந்துவீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இந்திய பவுலர்களின் இப்படி ஒரு சிறப்பான பந்துவீச்சை நான் இதற்கு முன்பு பார்த்து இல்லை. விக்கெட்டுக்கு நேராக நேர்த்தியுடன் வந்து வீசினார்கள். தொடர்ந்து இது மாதிரி அவர்கள் பந்து வீசுவது அவசியமாகிறது.

முதல் இன்னிங்ஸில் எங்களது துடுப்பாட்டம் மோசமானதாக இருந்தது. ஆனாலும் 2-வது இன்னிங்ஸில் எமது வீரர்கள் சிறப்பாக துடுப்பாட்டம் செய்தனர்.

சில ஆட்டமிழப்புகள் துரதிர்ஷ்டவசமானது. ரகானேக்கு கொடுக்கப்பட்ட எல்.பி.டபிள்யூ முடிவு அவ்வாறான தொன்று. முக்கியமான கட்டத்தில் இந்த அவுட் கொடுக்கப்பட்டது கடினமான ஒன்றாகும். இவ்வாறு தோனி கூறினார்.

# ஆஷஸ் தோல்வி பீற்றர்சன்-நீங்களா பலிக்கடா?

## பிளின்றொப் பாய்ச்சல்



ஆஷஸ் கிரிக்கெட் தோல்விக்கு பீட்டர்சனை பலிகடா ஆக்குவதா என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் பிளின்றொப் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் 5-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி தோல்வி அடைந்தது.

இதனைத் தொடர்ந்து அணியை வலுப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து முன்னணி வீரர் கெவின் பீட்டர்சன் நிரந்தரமாக நீக்கப்பட்டுள்ளார்.

இவர் நீக்கப்பட்டது குறித்து பல்வேறு விவாதங்கள் எழுந்துள்ளன.

முன்னாள் வீரர் பிளின்றொப் கூறுகையில், ஆஷஸ் தொடரின் தோல்விக்கு பீட்டர்சன் பலிகடா ஆக்கப்பட்டு விட்டார்.

இதுபோன்ற முடிவுகள் தவறானது, தனிப்பட்ட வீரர்மீது இதுபோன்று நடவடிக்கை எடுப்பது அணியின் உத்வேகத்தை சிதைத்து விடும் என்று தெரிவித்துள்ளார்.

## போர்க்குற்ற...

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அவரது அரசாங்கம் மேற்கொண்டு வரும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் என்பன அவர் விமர்சனங்களை பொறுத்து கொள்ள தயாராக இல்லை என்பதை வெளிகாட்டுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் சிரேஷ்ட அதிகாரி நிஷா தேசாய் பிஸ்வாலின இலங்கை விஜயம் மற்றும் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படவுள்ள இலங்கை சம்பந்தமான மூன்றாவது யோசனை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இந்த ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் இரத்தம் சிந்திய சிவில் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து கண்டறிய நம்பிக்கையானதும் சுயாதீனமானதுமான விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வாஷிங்டன் மீண்டும் முயற்சித்து வருகிறது.

இது குறித்து அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்த அமெரிக்க அரசின் சிரேஷ்ட பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பி வைத்தமை காலத்திற்கு ஏற்ற செயற்பாடகும்.

போரின் இறுதிக்கட்டத்தில் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக அது தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

கொல்லப்பட்டவர்களின் அதிகளவானவர்கள் அரசாங்கத்தின் ஷெல் வீச்சு தாக்குதலிலேயே கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது. மாத்திரமின்றி அந்த விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கு தடையேற்படுத்தியது.

அரச படையினரும், தமிழ்ப் பிரிவினைவாத விடுதலைப் புலிகளும் மேற்கொண்ட போர் குற்றங்களை கண்டறியும் விசாரணைகளை நடத்துமாறு ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் இதுவரை இரண்டு யோசனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆனால் இந்த இரண்டு யோசனைகளையும் இலங்கை அரசாங்கம் புறந்தள்ளியுள்ளது. இவ்வாறான மூன்றாவது யோசனை ஒன்றை கொண்டு வரும் அமெரிக்கா திட்டமிட்டுள்ள நிலையிலேயே தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி ராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக அமெரிக்க ராஜாங்க திணைக்களம் தெரிவித்தது.

போர் முடிந்து 5 வருடங்கள் கடந்த நிலையில் பொறுப்புக் கூறும் விடயம் தொடர்பில் விடுக்கப்படும் இந்த கோரிக்கையை மறந்து விட உலகத்திற்கும் அமெரிக்காவுக்கும் சிரமமான காரியமல்ல.

ஆனால் அப்படி மறந்து விடுவது அனர்த்தமான நிலைமையை ஏற்படுத்தும். காரணம் பொறுப்புக் கூறல் இன்றி மாபெரும் மனித படுகொலைகளை நிகழ்த்த தமக்கு அனுமதி கிடைத்திருப்பதாக அவர்கள் நினைக்க கூடும்.

ராஜபக்ஷவின் எண்ணத்தையும், நோக்கத்தை உணர்ந்து கொள்ள முடியாதளவில் எவரும் வலு குறைந்தவர்கள் அல்ல. முறையான விசாரணைகளை நடத்துவதில் அவர்களுக்கு அக்கறையில்லை.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அவர்கள் விமர்சனங்களை பொறுத்து கொள்ள தயாரில்லை என்பதை காட்டுகிறது.

இந்த நிலையில், சர்வதேச அழுத்தங்கள் காரணமாக விருப்பமின்றியேனும் இலங்கை அரசாங்கம் சில தீர்மானங்களை எடுத்துள்ளது என்பது உண்மையே.

பல வருடங்களாக அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டு வந்த, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டமை இதற்கான உதாரணமாகும்.

தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட வட மாகாணசபை போர் குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற பிரேரணையை நிறைவேற்றியது.

போரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து முழுமையான பொறுப்புக் கூறலை கோரி நிற்கும் இலங்கையர்களுடன் சர்வதேசமும் அணித்திரள்வது முக்கியமானது என அந்த ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. (செ-2)

## தமிழர்களின்...

னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வலம்புரிக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு சென்றது போன்று இம் முறையும் செல்லும்.

ஐ.நா அமர்வில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் தலைமையில் மேற்கு நாடுகளின் ஆதரவுடன் முன்வைக்கப்படவுள்ள பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் முகமாகவே நாம் ஜெனிவாவிற்கு செல்லவுள்ளோம்.

ஏற்கெனவே கடந்த ஜனவரி மாதம் 28; 29, 30 ஆகிய திகதிகளில் ஜெனிவாவிற்கு சென்று அங்கு பல தூதரகங்களுக்கும் சென்று பிரதிநிதிகளையும் பல நாட்டு பிரதிநிதிகளையும் சந்தித்து எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தேன்.

இதனைவிட ஐரோப்பிய ஒன்றியத்தினுடைய நாடுகளின் பிரதிநிதிகள் மட்டுமன்றி கடந்த வருடம் ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட இலங்கை அரசிற்கு எதிரான பிரேரணையை நிராகரித்த ஆபிரிக்க கண்டத்திலுள்ள நாடுகளின் பிரதிநிதிகளையும் , தென்னமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகளையும், ஒரு சில ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு நடத்தினேன்.

எங்களுடைய நிலைப்பாட்டை இதன்போது மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தியிருந்தேன்.

அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு மாதிரி பிரேரணையை அதாவது தமிழ் மக்களின் கோணத்திலிருந்து எப்படிப்பட்ட தொரு தீர்மானம் ஐ.நா மனித உரிமை பேரவையில் இம்முறை கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தொடர்பில் வேறு தரப்புகளுடனும் பேசி தயார்படுத்தி வருகின்றோம் இன்னும் ஒரு சில நாட்களுக்குள் அதை பகிரங்கப் படுத்தவும் உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## படுகொலைகளுக்கு...

ஆணைக்குழுவிற்கும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தலைமையிலான கூட்டணிக்கும் இடையிலான இரண்டாம் கட்ட சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஆணைக்குழுவின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

காணாமல் போனோர் தொடர்பாக நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தினால் ஏற்கெனவே ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கைகளை அமுல்படுத்துவது தொடர்பாகவே இந்த சந்திப்பின்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் ஆணைக்குழுவின் தலைவர் பராக்கிரம பரணகம, அதன் இணைப்பாளர் கெலி, கூட்டணி சார்பாக வட மாகாண சபை உறுப்பினர் அஷ்ஷெய்க் அஸ்மின் அய்யூப் (நளீமி), பொறியியலாளர் அப்துர் ரஹ்மான், அஷ்ஷெய்க் நஜா முஹம்மத் அஷ்ஷெய்க் பிர்தெளஸ் (நளீமி), சிறாஜ் மசூர், முஹம்மட் முஜீப் மற்றும் ஜெஸ்ரூன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"காணாமல் போனோர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் இடங்களை சம்பந்தப்பட்டோரிடம் உரிய விசாரணைகள் செய்வதன் மூலம் கண்டறிந்து அவர்களின் உறவினர்களுக்கு உரிய மார்க்கக் கிரியைகளை நிறைவேற்றுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

அத்தோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குரிய நஷ்டஈடுகளைவழங்குவதோடு இப்படுகொலைகளுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர். இக்கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்ட ஆணைக்குழுவின் தலைவர் இப்புதைகுழிகளை உடனடியாக தோண்டவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களை அடையாளம் காணும் முகமாக புதைகுழிகளிகளில் கண்டெடுக்கப்படும் எச்சங்களை மரபணு பரிசோதனை செய்வதற்கான சகல செலவினங்களையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட நிறுவனம் ஏற்றுக கொள்ள முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பிலான சில சட்ட ரீதியான நடவடிக்கைகளை நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் ஆலோசனை வழங்கினார். அத்தோடு இக் கடத்தல் சம்பவம் நடைபெற்ற காலங்களில் குறித்த பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்தவர்களை ஆணைக்குழு முன்பாக அழைத்து விசாரணைகளை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் உறுதியளித்தார்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் இவ்வாறான நியாயமான கோரிக்கைகளை முதன்முதலாக முஸ்லிம் சமூகம் சார்பில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பித்ததையிட்டு தாம் திருப்தி கொள்கின்றதென அதன் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு ஆணைக்குழுவின் தொடர்ச்சியான நடவடிக்கைகளல் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் ஒத்துழைப்புக்களையும் ஆலோசனைகளையும் தாம் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பிலான தகவல் விபரங்களின் தொகுப்பு ஒன்றும் இச் சந்திப்பின்போது நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் குழுவினரால் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-2)

## வயோதி...

சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

தினமும் காலையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வந்து செல்லும் இவர் வழமை போன்று நேற்றைய தினமும் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்தபோது இயலாமல் இருப்பதாகக் கூறி உட்கார்ந்து அப்படியே உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(செ-6)

## 20 ஆவது...

கொள்ளப்பட்டு வந்த அகழ்வுப்பணிகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மீண்டும் இன்று 20 ஆவது தடவையாக மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் திருக்கேதீஸ்வரம் மனித புதை குழி தோண்டப்படவுள்ளது. (செ-6)


# கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ
ச. நித்தியானந்தக் குருக்கள்

எமது அன்புக்குரியவரும், நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் முன்னாள் பிரதம குருவும் ஆகிய சிவஸ்ரீ ச. நித்தியானந்தக் குருக்கள் 08.02.2014 அன்று இறைவனடி சேர்ந்ததை இட்டு மனம் வருந்துகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானையும் வெங்கடேசப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் குடும்பம்.
யாழ். வண் வடகிழக்கு கலட்டி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு.

(C-6472)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

1. உதவி முகாமையாளர் :- (ஆண் / பெண்)

பட்டதாரிகள் மாத்திரம். 50 வயதுக்குட்பட்டவர்கள். 2 வருட சேவை ஒப்பந்தம்.

2. அலுவலக உத்தியோகத்தர் :- (பெண்கள்)

A/L சித்தி
50 வயதிற்குட்பட்டவர்கள்

2 வருட சேவை ஒப்பந்தம்

நேர்முகத் தேர்வு :- 12.02.2014 (புதன்)
பி.ப. 5.30 மணி

சனி, ஞாயிறு வேலை நாளாகும். வெள்ளிக்கிழமைகளில் ஓய்வு வழங்கப்படும்.
தினமும் மாலை 6.00 மணிக்கே பணி நிறைவடையும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-6470) www.thisaivisa.com

அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..

கோலாசிற்றி தொழில் வங்கி 021 320 2787
224/1. நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

## MOBILE PHONE REPAIRING COURSE

(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)

*நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா? வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?*

**4 days course**

புதுப்பொலிவுடன் யாழ்நகரில
உங்கள் எதிர்காலத்துக்கு
மாதம் 150,000/-க்கு மேல்
வருமானம் ஈட்ட ஒருவாய்ப்பு.

திருத்தும் துறையில் 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களைஉருவாக்கியமுதற்தர ஆசிரியருமான Ganesh.K.

பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்கமுடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும.

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi lane
Jaffna.
TP: 021 790 4468
MO: 0777 444 225
(C-6463)

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ணா

4 1/2 ரக்ரர் - 19000 /- 0777 590 792

(C-6464)

## Immediataly Vacancy

வாழ்க்கையில் சந்தேகமா? O/L,A/L படித்த பின்பும் உங்களுக்கு வேலையின்மையா? அதற்காக எமது Innovage நிறுவனம் வடக்கில் 5 புதிய கிளைகளை ஆரம்பிக்க உள்ளது. (யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு)

ஆகிய பிரதேச வாசிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
அனைவருக்கும் 4-6 மாத கால இலவசப் பயிற்சியும் வழங்கப்படும்.

கல்வி தகுதிக்கேற்ப நிரந்தர வேலை வழங்கப்படும் அத்தோடு வெளிநாடு செல் லும் வாய்ப்பும் உண்டு.

விண்ணப்ப முடிவுத் திகதி 28.02.2014
தங்குமிட வசதி உண்டு

தொடர்பு :- 077 005 6677, 077 421 6146, Hot Line :- 077 892 0777

(5446) www.grantan sri lanka.com


## ‘டினோ’...

பல்ஸர் மோட்டார் சைக்கிள் மற்றும ஒரு ஹீரோ கொண்டா மோட்டார் சைக் கிளும் இரும்பு கம்பிகளும் கொட்டன்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மேற்படி நபர்களை மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளகமறியலில் வைக்கு மாறு அவர் உத்தர விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்த ஆவா குறுப்பை சேர்ந்த சுமார் 15 பேருக்கு மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் [illegible] செய்யப்பட்ட நிலையில் டினோ என அழைக்கப்படும் மற்றுமொரு சமூக விரோதக் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளமையும் அவாகளிடமிருந்து உயிா ஆபத்தை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளமையும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (செ-6)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA (AF)

af

பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**யார் AF இல் FRENCH படிக்க முடியும்?**

திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய, தொடர்ந்து French படிக்க / கல்விகற்க செல்வோர், French கற்கவிரும்புவோர். உலகில் French கற்பிப்பதற்கு French அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரேஒரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே

- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற...
- Videos for listening & speaking practice : "Bienvenue en France" Episode N°. 1,2,3,4... மேலும் Audio CDs (முற்றிலும் இலவசமாக பயிற்சி பெறலாம்)
- வகுப்பறையில் வழங்கப்படும் பாடப் பிரதிகள் (Photocopies) முற்றிலும் இலவசம். மாணவர்களுக்காக பிரமாண்டமான நூலக வசதிகள், DVD s...
- அதியுயர் தகைமைகளையுடைய பல ஆசிரியர்களை கொண்ட ஒரே நிறுவனம் எமதே. வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் இங்கு படித்து செல்கிறார்கள்
- **Exams, Certificates and International Diplomas**
  1. Elementary level - 1 (6 Months, CERTIFICATE Course)
  2. International Diplomas : DELF A1, A2

எங்கு French படித்தாலும் DELF பரீட்சைகளை எமது AF இல் மட்டுமே எழுத முடியும். மேலும் உலகில் AF இல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. யாழில் வேறு இடத்தில் எமது Branches இல்லை.

- கலை, கலாசார நிகழ்வுகளுடன் சான்றிதழ் வழங்கும் வைபவங்கள்...
- Letter in French : 6 மாதத்தினை முடிக்காதோருக்கு / Embassy க்கு (இலவசம்)
- Translations in French: பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள்.

(5521)

கவனிக்கவும் : சர்வதேச பரீட்சைகள், Certificates ஐ உலகில் AF மட்டுமே வழங்கி வருகிறது. யாழில் AF 1976 முதல் இயங்கிவருகிறது. Embassy இலும் France இலும் எமது Certificates மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.

புதிய வகுப்புகளுக்கு உடன் பதிவுசெய்யுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்..61,Kachcheri-Nallur Road, Jaffna 021 222 8093 (கச்சேரியை அடுத்து வரும் சந்தியில்/Racca வீதியில் British council அருகில்)

edexcel

## GCE (O/L) தகைமையுடன்...




## BTEC National Diploma In Engineering

**International Engineering Foundation (IEF)**

» GCE A/L இல் கணிதப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு தகைமை இன்றி GCE (O/L) தகைமையுடன் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அவசியமான தகைமையினை இப்பாடநெறி வழங்குகின்றது.

» Engineering துறையில் அதிகரித்து வரும் உயர் தொழில் வாய்ப்புகளை விரைவாக அடைந்துகொள்வதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி.

» 10 மாதகால துரித பாடநெறியை BCAS Campus இன் யாழ் வளாகத்தில் பூர்த்தி செய்து இலங்கையில் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் நீங்கள் விரும்பும் துறைகளில் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அனுமதிகளை இப்பாடநெறி உத்தரவாதப்படுத்துகிறது.

**Enroll now and fast track your career in Engineering.**

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
15 YEARS
ISO 9001:2008 CERTIFIED
C-6466
Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்

விஷேட கட்டண சலுகைகள்

## பொதி விநியோக சேவை



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிப்பட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
021 753 8330, 0777 151 101

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062
(C-6462)

## யாழில் ஸ்ரீ கொழும்பு பிறின்டேர்ஸ்

போட்டோக்கொப்பி இருபக்கம் 2/=

அச்சுத்துறையில் பல நியாயவிலைகளை அறிமுகப்படுத்திய நாம் மீண்டும் ஒரு நியாயவிலையை அறிமுப்படுத்துகிறோம்.

ஒரே விடயத்தில் கூடியளவு பிரதிகள் எடுப்பவர்களுக்கு விலைக்கழிவு வழங்கப்படும்.

கலர் பிறிண்ட் 10/=

(C-6459) 666 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 0771974875


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.